**கவனிக்க.-** 2026.05.29 ஆந் திகதிய 2491 ஆம் இலக்க, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II தமிழில் பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை


අංක 2492 - 2026 ජූනි මස 05 වැනි සිකුරාදා - 2026.06.05

2492 ஆம் இலக்கம் - 2026 ஆம் யூன் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1710 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1738 |


**கவனிக்க.-** இலங்கை ஊடக உயர் தொழிலாளர்களின் பட்டயம் பெற்ற நிறுவகம் சட்டமூலம் 2026.06.05 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2026, யூன் மாதம் 26 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2026, யூன் மாதம் 12 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**பிரசன்ன ஜயரத்ன**,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1707 - B 82798- 403 (2026/06)

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

1. **வேண்டப்படும் பொதுத் தகைமைகள்** :

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிற பதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களுக்கும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

2. **சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரசாங்க சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர்; தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

3. **நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள்** :

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்க வேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுரத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/ 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரசாங்க சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரசாங்க சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரசாங்க சேவையில் ஏற்கனவே நிரந்தர/ தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

4. **பணிக்கமர்த்தும் நியதிகள்** :

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரசாங்க சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிச் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரசாங்க சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரசாங்க சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

5. **யுத்த சேவைச் சலுகை** :

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

6. **அரசாங்க சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்** :

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரசாங்க சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமையபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

7. **தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை** :

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

8. **ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை** :

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/ 90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

## பரீட்சார்த்திகளுக்கான விதிகளும் அறிவுறுத்தல்களும்

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் காலத்துக்குக்காலம் வெளியிடப்படுகின்ற சட்டங்களுக்கும் ஒழுங்குமுறைகளுக்கும் ஏற்ப ஒழுகுவதற்கு சகல பரீட்சார்த்திகளும் கட்டுப்பட்டவர்களாவர்.

1976 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கத் திருத்தச் சட்டத்துக்கமைவான, 1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் 20 ஆம் வாசகத்தின் மூலம் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்துக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய கீழ்க் குறிப்பிடப்படும் நிபந்தனைகள் மற்றும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுகின்றன.

அனைத்துப் பரீட்சார்த்திகளும், கீழ்க் குறிப்பிடப்படும் விதிகளுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதுடன் இவ் விதிகளில் எவற்றையேனும் மீறும் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் தீர்மானத்துக்கு அமைய கீழ்க் குறிப்பிடப்படும் தண்டனைகளில் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட தண்டனைகளுக்கு உட்படுத்தப்படுவார்.

I. விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்ற முழுப் பரீட்சைக்கும் அல்லது அதன் ஒரு பகுதிக்கு தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
II. விசாரணைக்கு உட்படுத்தப்படும் பரீட்சையின் ஒரு பாடத்திற்கு அல்லது மொத்தப் பரீட்சைக்கும் தகுதியற்றவர் ஆக்குதல்;
III. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் நடாத்தப்படுகின்ற அனைத்துப் பரீட்சைகளுக்கும் தோற்றுவதற்கு வாழ்நாள் தடை விதித்தல்;
IV. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற பரீட்சைகளில் தோற்றுவதற்குத் தடை விதித்தல்;
V. இடைநிறுத்தப்பட்ட, பரீட்சைக்கான தடை உடன் கடிதம் ஒன்றை வழங்குதல்;
VI. குறிப்பிட்ட காலப் பகுதிக்கு சான்றிதழ் தடை செய்யப்படல்;
VII. பொதுப் பரீட்சைகள் சட்டத்தின் கீழ் குற்றவியல் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்வதற்காக பரீட்சார்த்தியை காவற்றுறையிடம் ஒப்படைத்தல் அல்லது அக்குறித்த செயற்பாடு தொடர்பாக காவற்றுறையில் புகார் செய்தல்;
VIII. பரீட்சார்த்தி அரசாங்க ஊழியராக அமையும் சந்தர்ப்பத்தில் குறித்த பரீட்சார்த்தியின் செயற்பாடு தொடர்பாக (ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக) குறித்த பரீட்சார்த்தியின் நியமன அதிகாரிக்கு அறிவித்தல்.

பரீட்சைக்கு முன்பு, பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் போது அல்லது பரீட்சைக்கு பின்பு அல்லது வேறு எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் அவ்வாறான பரீட்சார்த்தி தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் அதிகாரத்தை பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், தம்வசம் கொண்டவர் ஆவார். இது தொடர்பாக அவரால் மேற்கொள்ளப்படும் தீர்மானம் இறுதியானதாகும்.

1. சகல பரீட்சார்த்திகளும் பரீட்சை மண்டபத்தினுள் மற்றும் பரீட்சை நடைபெறும் வளாகத்தினுள் பரீட்சை மேற்பார்வையாளருக்கு அவரது பணிக் குழாமுக்கு, அதே போன்று ஏனைய பரீட்சார்த்திகளுக்கு இடையூறு அல்லது தடங்கல்கள் ஏற்படாத வகையில் நடந்துகொள்ள வேண்டும். பரீட்சார்த்திகள் பரீட்சை வளாகத்தின் சொத்துகளுக்கு அல்லது பரீட்சை ஊழியர்களின் தனிப்பட்ட சொத்துகளுக்கு சேதம் ஏற்படுத்துதல் கூடாது.
2. பரீட்சார்த்திகள் பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கும் காலப் பகுதியிலும் பரீட்சை ஆரம்பிப்பதற்கு முன்பும் அதே போன்று பரீட்சை நடைபெற்று முடிவடைந்தவுடனும் பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழுவின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப நடந்து கொள்ளல் வேண்டும்.
3. பரீட்சையின் போது வினாப்பத்திரத்திற்கு விடையளிப்பது ஆரம்பிக்கப்பட்டு அரை மணித்தியாலம் கழிந்த பின்னர் எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். மேலும் பரீட்சை முடிவடையும் வரை எந்தவொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கும் இடமளிக்கப்பட மாட்டாது. செயன்முறைப் பரீட்சைகள் அல்லது வாய்மொழி மூலமான பரீட்சைகளுக்கு உரிய நேரத்திற்கு சமுகம் அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.
4. சகல பரீட்சார்த்திகளும் தமது சுட்டெண்ணுக்குரிய ஆசனம் தவிர்ந்த வேறு எந்த இடத்திலும் அமர்தல் கூடாது. பரீட்சை மேற்பார்வையாளரின் விசேட அனுமதி இன்றி தன்னுடைய இடத்தை மாற்றக் கூடாது. தனக்கு ஒதுக்கப்பட்ட ஆசனத்தைத் தவிர வேறு இடத்தில் அமர்தல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்பட நேரிடும்.
5. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி பேணப்பட வேண்டும். எக் காரணம் கொண்டும் பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சை மேற்பார்வை பணிக்குழுவில் உள்ள ஒருவரைத் தவிர பரீட்சை மண்டபத்தினுள் அல்லது வெளியே இருக்கும் எவர் ஒருவருடனும் எந்தவித காரணத்திற்காகவும் கதைத்தல் அல்லது தகவல் பரிமாறல் அல்லது வேறு எந்தவிதமான கொடுக்கல் வாங்கலிலும் ஈடுபடுதல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
6. பரீட்சை சுட்டெண்ணை மட்டும் கொண்டே பரீட்சார்த்தியின் விடைத்தாள்கள் இனங்காணப்படுகின்றமையால் விடைத்தாளில் தன்னுடைய பெயரை எழுதுதல், விடைத்தாளை இனங்கண்டு கொள்ளக்கூடிய வகையில் ஏதேனும் குறியீடு அல்லது குறிப்பு இடுதல், விடைத்தாளில் அநாகரிகமான அல்லது அவசியமற்ற விடயங்களை எழுதுதல், விடைத்தாளுடன் நாணயத்தாள்களை இணைத்தல் ஆகியவை முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளன. மேலும் வேறு எவரேனும் பரீட்சார்த்தியின் சுட்டெண்ணை தன்னுடைய விடைத்தாளில் எழுதுதலும் மோசடி நடவடிக்கை ஒன்றைச் செய்வதற்கு முயன்றதாகக் கருதப்படும். இனங்கண்டு கொள்ள முடியாத வகையில் சுட்டெண் எழுதப்பட்ட விடைத்தாள்களும் நிராகரிக்கப்படும்;
7. உமக்கு பரீட்சை மண்டபத்தினுள் வழங்கப்படும் தாள்கள் (பரீட்சை நடைபெறும் திகதிக்குரிய நோக்குனரின் குறுகிய கையொப்பம் மற்றும் திகதி இடப்பட்ட விடை எழுதும் தாள்கள்) தவிர வினாத்தாளிலோ அல்லது மேசையிலோ அல்லது வேறு ஏதேனும் இடத்திலோ எவற்றையும் எழுதுதல் கூடாது. இந்த அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்படுதல் மோசடி நோக்கத்துடன் செய்யப்பட்ட செயலாகக் கருதப்படும்.
8. பரீட்சார்த்திக்கு வழங்கப்படுகின்ற தாள்களை அல்லது விடை எழுதும் புத்தகத்தை கிழித்தல் அல்லது கசக்குதல் கூடாது. பரும்படி வேலைகளை செய்து பார்ப்பதற்காக உபயோகிக்கும் சகல தாள்களையும் தெளிவாக குறுக்காக கோடிட்டு விடைத்தாளுடன் இணைத்தல் அல்லது விடைத்தாளுடன் கையளித்தல் அல்லது வழங்கப்படுகின்ற அறிவுறுத்தலின் படி செய்தல் வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதப்பட்ட எதனையும் வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. ஒரே வினாவிற்கான விடை இரு இடங்களில் எழுதப்பட்டிருப்பின் அவசியமற்ற விடையைத் தெளிவாக வெட்டி விட வேண்டும்.
9. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக உமக்கு வழங்கப்படுகின்ற தாள்கள் மற்றும் வேறு பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லுதல் தடை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறான அனைத்துப் பொருட்களும் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்திற்கு சொந்தமானதுடன் இவ் விதியினை மீறுதல் ஒரு தண்டனைக்குரிய செயற்பாடாகக் கருதப்படும்.
10. பரீட்சையின் போது விடையளிப்பதற்காக தனக்கு வழங்கப்படுகின்ற காகிதாதிகள் ஒவ்வொரு பரீட்சையின் போதும் தனதருகே வைத்துக் கொள்ளக்கூடிய எழுத்து மூலமான அனுமதியுள்ள பொருட்கள் தவிர்ந்த ஏனைய குறிப்புப் புத்தகங்கள், குறிப்புகள் உள்ளடங்கிய தாள்கள் அல்லது கடதாசித்துண்டுகள் போன்றவை பரீட்சை மண்டபத்தினுள் பரீட்சைக்குத் தோற்றும் சந்தர்ப்பத்தில் தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் கூடாது. அது போன்றே பரீட்சை மண்டபத்தினுள் கையடக்கத் தொலைபேசி, இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் (Electronic Communication Instruments/ Devices) தன் வசம் அல்லது அருகே வைத்திருத்தல் மற்றும் அந்த சாதனங்கள்/கருவிகளை உபயோகித்து வெளி நபர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளல் மற்றும் பரீட்சை நடைபெறும் போது வேறு நபர்களுக்கு மற்றும் சமூக ஊடகங்களுக்கு தகவல் அனுப்புதல் மோசடிச் செயற்பாடு என்பதுடன் தண்டனைக்குரிய குற்றமாகும்.
11. இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகள் மேற்குறிப்பிட்ட 10ஆவது பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக உபயோகிக்கப்பட்டது கண்டுபிடிக்கப்பட்டால் அச் சாதனங்கள்/கருவிகள் உரிய விசாரணை நடவடிக்கைகள் முடிவடையும் வரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் வசம் எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.
12. பரீட்சை மண்டபத்தில் அமர்ந்த பின்னர், பரீட்சைக்கு முன் அல்லது பரீட்சை நடைபெறும் சந்தர்ப்பத்தில் எந்தவொரு பரீட்சார்த்தியும் தன் அருகே பரீட்சைக்காக கொண்டு வருவதற்கு அனுமதிக்கப்படாத எந்தவொரு பொருளையும் அல்லது உபகரணத்தையும் வைத்திருத்தல் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது. பரீட்சை மேற்பார்வையாளர் மற்றும் அவரது பணிக் குழாம் கட்டளையிட்டால் சகல பரீட்சார்த்திகளும் தன் வசம் உள்ளவற்றை வெளிப்படுத்துவதற்கும் மற்றும் பரிசோதிப்பதற்கும் கட்டுப்படுவதுடன் இவ்வாறான தேவைப்பாட்டினை மீறுவது மோசடியான செயற்பாட்டை செய்வதற்கு முயற்சித்ததாகக் கருதப்படும்.
13. எவரேனும் ஒரு பரீட்சார்த்தி வேறு ஒரு பரீட்சார்த்தியின் விடைத்தாளிலிருந்து அல்லது புத்தகத்திலிருந்து அல்லது தாளிலிருந்து அல்லது குறிப்பெழுதிய தாள்களிலிருந்து அல்லது சமிக்ஞைகள் மூலம் அல்லது வேறு ஏதேனும் ஒன்றிலிருந்து பார்த்து எழுதுதல் அல்லது பார்த்து எழுத முயற்சித்தல் அல்லது மோசடியாக நடந்து கொள்ளல் என்பன குற்றமாகும். வேறு பரீட்சார்த்திக்கு உதவி செய்தல், வேறு பரீட்சார்த்தியிடமிருந்து அல்லது நபரிடமிருந்து அல்லது பரீட்சை பணிக் குழுவினரிடமிருந்து உதவி பெறுதல் குற்றம் என்பதுடன் விடையளித்து முடிந்த சகல தாள்களையும் எழுதிக் கொண்டிருக்கும் தாளுக்குக் கீழே வைத்து விடையளித்தல் வேண்டும். எழுதுகின்ற தாள்களை மேசையின் மேல் பரப்பி வைத்திருத்தல் கூடாது.
14. பரீட்சை ஆரம்பிக்கப்பட்டு வினாத்தாளுக்கு விடையளிக்கும் போது எக்காரணம் கொண்டும் குறுகிய நேரத்திற்குக் கூட பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்வதற்கு எந்தவொரு பரீட்சார்த்திக்கும் இடமளிக்கப்பட மாட்டாது. எனினும், ஒரு பரீட்சார்த்திக்கு மலசலகூடத்திற்கு செல்வதற்காக பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டால் பரீட்சை மேற்பார்வையாளரின் உதவி பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரின் கண்காணிப்பின் கீழ் பரீட்சார்த்திக்கு சிறிது நேரம் வெளியே செல்வதற்கு அனுமதிக்கப்படுவார். அவ்வாறு வெளியே செல்லும் முன்பும், மீண்டும் பரீட்சை மண்டபத்திற்குள் வரும் போதும் அவர் சோதனைக்கு உட்படுத்தப்படல் வேண்டும்.
15. பரீட்சை மண்டபத்தில் விடையளிக்கத் தொடங்குவதற்கு முன் அல்லது பின் உரிய பரீட்சார்த்திக்குப் பதிலாக போலிப் பரீட்சார்த்தி ஒருவர் தோற்றுதல் தண்டனைக்கு உள்ளாகக்கூடிய செயற்பாடாகும். ஆளடையாள அட்டையை மாற்றுதல் அல்லது போலி அடையாள அட்டையைச் சமர்ப்பித்தல் ஒரு மோசடிச் செயற்பாடாகக் கருதப்படும்.
16. பரீட்சார்த்தி ஒருவர் அல்லது பரீட்சார்த்தி அல்லாத ஒருவர் எந்தவொரு பரீட்சார்த்திக்கும் தவறான முறையில், மோசடி செய்யும் வகையில் உதவி செய்தல் ஒரு பாரிய குற்றமாக கருதப்படும்.
17. பரீட்சார்த்தி ஒருவர் கீழ்க் குறிப்பிடப்படும் அறிவுறுத்தல்களுக்கமைய செயற்படல் வேண்டும்:
    (i) சகல பரீட்சார்த்திகளும் தனது அனுமதிப்பத்திரத்தில் கையொப்பத்தினை உறுதி செய்து கொள்வதும், விண்ணப்பிக்கப்பட்ட பாடங்கள் மற்றும் அனுமதிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள பாடங்களுக்கிடையில் பொருந்தாத தன்மை காணப்படின் பரீட்சைத் திணைக்களத்தில் விசாரித்து பரீட்சைக்கு முன் அதைத் திருத்திக் கொள்வதும் மேற்கொள்ளப்பட வேண்டும்;
    (ii) பரீட்சை ஆரம்பிப்பதற்கு அரை (1/2) மணித்தியாலத்திற்கு முன்னர் பரீட்சை மண்டபத்திற்கு சமுகமளித்தல் உசிதமானது என்பதுடன், பரீட்சை மண்டபம் நிச்சயமாகத் தெரியாதவிடத்து பரீட்சை ஆரம்பிக்கும் தினத்திற்கு முன்னரே அது குறித்து விசாரித்து பரீட்சை மண்டபத்தை சரியாக இனங்காணல் சிறந்தது;
    (iii) பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி ஒவ்வொரு பாடங்களுக்குத் தோற்றும் போதும் தனது ஆள் அடையாள அட்டையை வழங்கி தனது ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.
        (a) ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்தில் சமர்ப்பிக்காவிடின், பரீட்சார்த்தியாய் இருத்தல் இரத்துச் செய்யப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன், ஏதேனும் காரணத்தால் அதற்குத் தேவையான ஆவணங்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு வர மறந்திருப்பின் அதனைப் பற்றி பரீட்சை மேற்பார்வையாளருக்கு அறிவித்து பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் அவற்றைச் சமர்ப்பிப்பதற்குரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
        (b) சகல பரீட்சார்த்திகளும் தனது ஆள் அடையாளம் தெளிவாக வெளிப்படுத்தும் வகையில், முழு முகத்தையும் நன்றாக அடையாளம் காணக்கூடிய வகையில் பரீட்சை நடைபெறும் கால எல்லையில் பரீட்சை மண்டபத்தில் இருக்க வேண்டும்.
    (iv) பரீட்சார்த்தி புளூடூத் (Bluetooth) போன்ற இலத்திரனியல் தொடர்பு சாதனங்கள்/கருவிகளை (Electronic Communication Devices) உபயோகிக்கவில்லை என்பதனை உறுதி செய்து கொள்வதற்காக பரீட்சை மண்டபத்தில் தனது இரு காதுகளையும் தெளிவாகத் தெரியும் வகையில் வைத்திருத்தல் வேண்டும்;
    (v) பரீட்சை மண்டபத்தில் உமக்கு வழங்கப்படுகின்ற தாள்களை விடுத்து வேறு எவ்வித கடதாசிகளையும் விடையளிப்பதற்கு உபயோகிக்கக் கூடாது. எஞ்சிய கடதாசிகளை மற்றும் வேறு பொருட்களை அசுத்தப்படுத்தாது மீண்டும் உபயோகிக்கக்கூடிய வகையில் உமது மேசையின் மேல் வைக்க வேண்டும்;
    (vi) பரீட்சார்த்திகள் தங்களது பேனா, பென்சில், அழிறப்பர், அடிமட்டம், கேத்திரகணித உபகரணங்கள், வர்ணப் பென்சில் பெட்டி, வர்ண சோக் பெட்டி போன்றவற்றைக் கொண்டு வருதல் வேண்டும்;
    (vii) நீங்கள் உபயோகிக்கும் விடையளிக்கும் புத்தகம் மற்றும் சகல தாள்களிலும் விடையெழுத தொடங்கும் போது உடனடியாக சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். விடைத்தாள்களின் இருபுறமும் தெளிவாக, சுத்தமாக விடையெழுத வேண்டும். வினாவொன்றின் ஒரு பகுதிக்கு விடையெழுதிய பின் அவ் வினாவின் மற்றைய பகுதியை ஆரம்பிப்பதற்கு முன் ஒரு வரியையாவது வெறுமையாக விடுதல் வேண்டும். ஒவ்வொரு வினாக்களுக்குமான விடையினைப் புதிய பக்கத்தில் ஆரம்பித்தல் வேண்டும்;
    (viii) விடையளிக்கும் தாளின் இடதுபுற விளிம்புக்கோடு காணப்படுவது வினாக்களின் இலக்கங்களை எழுதுவதற்காகும். வலதுபுற விளிம்புக்கோடு ஒதுக்கப்பட்டிருப்பது மதிப்பிடுபவரின் உபயோகத்திற்காகும். அதனால் அவற்றில் எதுவும் எழுதுதலாகாது. உம்மால் விடையளிக்கப்பட்ட வினாக்களின் இலக்கங்களைப் பிழையாக இடுவது குழப்பத்திற்குக் காரணமாக அமையும் என்பதனால் வினா இலக்கத்தைச் சரியாக எழுதுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்;
    (ix) கணித வினாக்களுக்கு விடையளிக்கும் போது கணக்குச் செய்முறைகள் பார்த்த மற்றும் பரும்படி வேலைகள் அந்தந்த ஒழுங்கில் கணக்கிற்கான விடையைக் கண்டு பிடித்ததன் ஒரு பகுதியாகக் காட்டப்பட வேண்டும். அவசியமான இடங்களில் வரையப்படும் வரிப்படங்கள் மற்றும் படங்கள் சரியானவையாகவும் குறிப்பிடத்தக்க அளவு பெரிதானதாகவும் இருத்தல் வேண்டும்;
    (x) கட்டாயமான வினா மற்றும் தெரிவு செய்யப்பட வேண்டிய ஏனைய வினாக்கள் தொடர்பாக வினாப்பத்திரத்தில் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்தல் வேண்டும். வினாப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு ஏற்ப விடையளிக்கப்படாத சந்தர்ப்பங்களில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது;
    (xi) ஒவ்வொரு வினாவிற்கும் விடையளித்து முடிந்த பின் விடையளித்த புத்தகத்திற்கு மேலதிகமாக எழுதிய தாள்களை பக்க இலக்கங்களின் ஒழுங்கில் இணைத்து இடதுபுற மேல்மூலையில் கழறாத வகையில் கட்டுதல்/இணைத்தல் வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளிக்கும் முன் சகல விடைத்தாள்களும் இணைக்கப்பட்டுள்ளனவா என்பதனை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். விடைப்பத்திரத்தைக் கையளித்த பின் பரீட்சை மண்டபத்திற்கு வெளியே கொண்டு செல்லப்பட்ட எந்தவொரு விடை எழுதிய தாளும் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட மாட்டாது;
    (xii) உங்கள் விடைத்தாளை பரீட்சை மேற்பார்வையாளரிடம் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவரிடம் கையளித்தல் வேண்டும். விடைப்பத்திரங்களை சேகரிக்கும் வரை உங்களது ஆசனத்தில் அமர்ந்திருத்தல் வேண்டும். அவ்வாறு செய்வதற்குத் தவறுவதானது, சிலவேளை உமது விடைப்பத்திரம் காணாமல் போவதற்கும் நீர் ஏதாவது பாடத்திற்கு சமுகமளிக்கவில்லை என்று கருதுவதற்கும் காரணமாக அமையும்;
    (xiii) ஏதாவது காரணத்துக்காக பரீட்சை மேற்பார்வையாளருடன் அல்லது பணிக் குழுவின் உத்தியோகத்தர் ஒருவருடன் கதைக்க வேண்டிய அவசியம் ஏற்படின், ஏனையவர்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில் மேசையில் இருமுறை தட்டுவதன் மூலம் சமிக்ஞை செய்தல் வேண்டும்.

**பரீட்சைகள் ஆணையாளர் நாயகம்.**
**இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்,**
**பெலவத்தை,**
**பத்தரமுல்லை.**

# பதவிகள் - வெற்றிடம்

## அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு

## வணிகக் கப்பற்றுறைச் செயலகம்

## துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் பரீட்சைப் பரிசோதகர் (பொறியியல்) பதவிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல் - 2026

துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் பரீட்சைப் பரிசோதகர் (பொறியியல்) பதவிகளுக்கு இந்த அறிவித்தலின் 02 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *பதவி* | *வெற்றிடங்களின் எண்ணிக்கை* |
|---|---|
| 1. பரீட்சைப் பரிசோதகர் (பொறியியல்) - ஒப்பந்த அடிப்படை | 01 |

விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி: 2026.07.06.

01. **ஆட்சேர்ப்பு செய்யும் முறை** :

இந்த அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையொன்றினால் நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சை முடிவின்மீது ஆகக்கூடுதலான புள்ளிகளைப் பெறும் அபேட்சகர்களைக் கொண்டு வெற்றிடங்களுக்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்யப்படும் நேர்முகப் பரீட்சையின் போது பின்பற்றப்படும் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதும் கட்டமைக்கப்பட்டதுமான புள்ளி வழங்கும் நடைமுறையானது இந்த அறிவித்தலின் 05 ஆம் இலக்கத்தின் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ளது.

02. **தேவையான தகைமைகள்:**

i. **கல்வித் தகைமைகள், அனுபவம் உட்பட பிற தகைமைகள்:**

| *பதவி* | *கல்வித் தகைமைகள்* | *அனுபவம் மற்றும் பிற தகைமைகள்* |
|---|---|---|
| பரீட்சைப் பரிசோதகர் (பொறியியல்) | இலங்கை அல்லது ஐக்கிய இராட்சியம், அவுஸ்திரேலியா, கனடா, சீனா, இந்தியா, பாகிஸ்தான், நியுசிலாந்து, மலேசியா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளில் ஏதாவதொரு நாட்டின் அல்லது இயைபுள்ள சான்றிதழை ஏற்றுக்கொள்வது சம்பந்தமாக இலங்கையுடன் இரு தரப்பு ஒப்பந்தங்களைச் செய்துள்ள நாடொன்றின் அரசாங்க கப்பற்றுறை நிர்வாக நாடொன்றினால் வழங்கப்பட்ட பிரதான பொறியியலாளர் தேர்ச்சிச் சான்றிதழைப் பெற்றிருத்தல். | தனி எடை 3000 தொன் கொண்ட கடற் பிரயாணத்தில் ஈடுபடும் வணிகக் கப்பல் ஒன்றின் பிரதான பொறியிய லாளராக ஆகக் குறைந்தது இரண்டு (02) வருட கால அனுபவத்தினைக் கொண்டி ருத்தல். |

ii. **உடற்தகுதி:**

அபேட்சகர் ஒவ்வொருவரும் இலங்கையின் எப் பாகத்திலும் சேவை புரிவதற்கும் பதவிக்கான கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான உடல் ஆரோக்கியமும் சிறந்த மனநிலையும் கொண்டவராய் இருத்தல் வேண்டும்.

iii. வயதெல்லை:

பொருத்தமற்றது.

iv. பிற தகைமைகள்:

- விண்ணப்பதாரர்கள் இலங்கைப் பிரசைகளாய் இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாக இருத்தல் வேண்டும்.

குறிப்பு: விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதியன்று விண்ணப்பதாரர்கள் மேற்குறிப்பிட்ட சகல தகைமைகளையும் எல்லா விதத்திலும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

03. **பணிக்கமர்த்தல் நிபந்தனைகளும் சேவை நிபந்தனைகளும்:**

i. இந்த நியமனம் அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளுக்கும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவைக்கும் அரசாங்க நிதி நியதிக்கும் திணைக்களத்தின் ஏனைய கட்டளைகளுக்கும் துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறைச் செயலகத்தின் பரீட்சைப் பரிசோதகர் (பொறியியல்) பதவிகளுக்குரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதும் எதிர்காலத்தில் செய்யப்பட்டுள்ளதுமான திருத்தங்களுக்கும் ஏற்பாடுகளுக்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

ii. விண்ணப்பிக்கும் மொழிமூலமானது பின்னர் மாற்றப்படுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாதென்பதோடு, விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் மொழி மூலமானது நியமனத்தைப் பெறுவதற்கு தகைமையுடைய மொழிமூலமாகும்.

04. **சம்பள அளவுத்திட்டம்:**

இப் பதவிக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 175,000.00 ரூபாவும் மேலதிகமாக நியமனம் வலுப்பெறும் காலப்பகுதியில், நிரந்தர நியமனம் கொண்ட அதிகாரி ஒருவருக்கு சட்ட ரீதியாக உரித்துடைய சிறப்புரிமைகளுக்கும் உரித்துடையதாகும்.

05. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது பின்வரும் புள்ளி வழங்கும் திட்டமானது அடிப்படையாகக் கொள்ளப்படும்:

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 01 | **மேலதிகக் கல்வித் தகைமைகள்** | | 30 |
| | i. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து / நிறுவனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடற் பொறியியல் தொடர்பான பட்டப்பின் படிப்பு. | 30 | |
| | ii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடற் பொறியியல் தொடர்பிலான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா | 20 | |
| | iii. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கடற் பொறியியல், தொடர்பிலான பட்டம் | 15 | |
| | (ஆகக்கூடுதலான தகைமைக்கு மாத்திரம் புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| 02 | **தொழிற் தகைமைகள்** | | 10 |
| | சமுத்திரக் கண்காணிப்பு, கப்பற் பதிவு, சமுத்திர சட்டம், ஒழுங்குவிதி சமுத்திரப் பரிசோதனை மற்றும் ஆய்வு அல்லது கப்பற்றுறை அலுவல்கள் பாதுகாப்புத் தொடர்பிலான சர்வதேச நியமங்கள் போன்ற துறைகளுக்குரியதாக இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட – | | |
| | i. ஆறு (06) மாத காலம் அல்லது அதற்குக் கூடுதலான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறியொன்று. | 10 | |
| | ii. மூன்று (03) மாத காலம் அல்லது அதற்கு மேல் அத்துடன் ஆறு (06) மாதங்களுக்குக் குறைவான முழுநேர அல்லது அதற்குச் சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறியொன்று. | 07 | |

| *தொடர் இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *ஆகக்கூடிய புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| | iii. மூன்று (03) மாத காத்திற்குக் குறைவான முழுநேர அல்லது அதற்கு சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறியொன்று.<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்குப் புள்ளிகள் வழங்கப்படும்) | 03 | |
| 03 | **மேலதிக அனுபவம்**<br>i. ஆட்சேர்ப்புத் திட்டத்தின் தகைமைகளின் கீழ்க் குறிப்பிட்டுள்ள ஆகக்குறைந்த அனுபவத்திற்கு மேலாகவுள்ள அனுபவ காலம் சார்பில்<br>- ஆண்டொன்றுக்கு 05 புள்ளிகள் வீதம், ஆகக் கூடுதலாக 30 புள்ளிகள்<br>- 06 மாதங்களுக்கு கூடுதலான மற்றும் 01 வருடத்திற்குக் குறைவான – 02 புள்ளிகள் | | 30 |
| 04 | **துறை சார்ந்த பங்களிப்பு**<br><br>துறைக்குரியதாக தேசிய அல்லது சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப் பட்ட கல்விசார் வெளியீடொன்றில் பிரசுரிக்கப்பட்ட வெளியீ டொன்று அல்லது புலமைச் சொத்துடனான புத்தாக்கம் என்பன முறையான/ ஏற்றுக்கொள்ளப்பட்ட அங்கீகாரங்கள் அல்லது சான்றிதழ்கள் மூலம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | 10 | 10 |
| 05 | **கணினி ஆற்றல்**<br><br>கடற் பொறியியல், இயந்திரப் பொறியியல் கடல் அறிவியல் அல்லது கணினி சார்ந்த பயிற்றுவித்தல் மற்றும் பரீட்சைகளை நடாத்துதல் போன்ற துறைகளுக்குரிய தகவல் தொழில்நுட்ப/கணினி முறைமை மற்றும் கணினிப் பிரயோகம் தொடர்பில் இலங்கை அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட –<br>i. ஆறு 06) மாத காலம் அல்லது அதற்கு கூடுதலான முழு நேர அல்லது அதற்குச் சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br>ii. மூன்று மாத காலம் அல்லது அதற்குக் கூடுதலான அத்துடன் ஆறு (06) மாதங்களுக்குக் குறைவான அல்லது அதற்குச் சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br>iii. மூன்று (03) மாத காலத்திற்குக் குறைவான முழுநேர அல்லது அதற்குச் சமமான கற்கைக் காலத்துடனான பாடநெறியொன்று சார்பில்<br><br>(ஆகக் கூடுதலாக இரண்டு (02) சான்றிதழ்களுக்கு புள்ளிகள் வழங்கப்படலாம்) | 15<br>10<br>03 | 15 |
| 06 | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை சார்பில் | | 05 |
| | மொத்தம் | | 100 |

06. **விண்ணப்பதாரர்களின் ஆளடையாளம் :**

i. சகல விதத்திலும் பூர்த்தி செய்யப்பட்டுள்ள விண்ணப் பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்கள் மாத்திரமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட் சைக்கு அழைக்கப்படுவர்.

ii. நேர்முகப் பரீட்சையின்போது சகல சான்றிதழ் களினதும் மூலப் பிரதிகளும் உரிய முறையில் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளும் சமர்ப்பிக்கப் படுதல் வேண்டும்.

iii. நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆள் அடையாளத்தை எண்பிப்பதற்காக பின்வருவன ஏற்றுக்கொள்ளப்படும்:

அ. ஆட்பதிவு ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை;

ஆ. செல்லுபடியாகும் கடவுச்சீட்டு.

07. **விண்ணப்பிக்கும் முறை :**

i. விண்ணப்பங்களை 2026.07.06 அல்லது அதற்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடிய வாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வணிகக் கப்பற்றுறைப் பணிப்பாளர் நாயகம்,
இல. 79,
தொழில்நுட்ப சந்தி,
மருதானை வீதி,
கொழும்பு 10.

ii. சமர்ப்பிக்கப்பட வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவமானது இந்த அறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் அவர்களுடைய விண்ணப்பங்களை A4 அளவு தாளொன்றில் தயாரித்து முதலாம் பக்கத்தில் இலக்கம் 01 இலிருந்து 09 வரையும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 10 இலிருந்து 15 வரையும் இருக்கக்கூடிய விதத்தில்; தயாரித்து தத்தமது கையெழுத்துக்களில் பூர்த்தி செய்தல் வேண்டும்.

iii. விண்ணப்பங்கள் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பரீட்சைப் பரிசோதகர் (பொறியியல்) - (ஒப்பந்த அடிப்படை) பதவிக்கு ஆடசேர்ப்பு செய்தல்” எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

iv. விண்ணப்பத்தில் விண்ணப்பதாரரின் ஒப்பமானது அரசாங்க பாடசாலையொன்றின் அதிபர் ஒருவரினால்/ சமாதான நீதவான் ஒருவரினால்/ சத்தியப்பிரமாண ஆணையாளர் ஒருவரினால்/ சட்டத்தரணி ஒருவரினால்/ பிரசித்த நொத்தாரிசு ஒருவரினால்/ முப்படையைச் சேர்ந்த ஆணை பெற்ற உத்தியோகத்தர் ஒருவரினால் அல்லது 10/2025 ஆம் இலக்கமுடைய அரசாங்க நிர்வாக சுற்றறிக்கைக்கு அமைவாக ரூபா 82,150.00 கொண்ட மாதாந்த சம்பளமொன்றைப் பெறும் நிரந்தரப் பதவியொன்றை வகிக்கும் அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப் படல் வேண்டும்.

v. தற்போது அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை தாம் சேவை யாற்றும் திணைக்களத்தின் தலைவரின் ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும்.

vi. இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைவாக இல்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் போன்ற எவ்வித முறைப்பாடுகளும் பொறுப் பேற்கப்படமாட்டாது.

08. தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப் பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்கள் உண்மையற்றவை அல்லது பிழையானவை என ஆட்சேர்ப்பு செய்வ தற்கு முன்னர் எண்பிக்கபப்பட்டால் தங்களது அபேட்சகத்தன்மை இரத்துச் செய்யப்படும். இத்தகைய உண்மையற்ற அல்லது பிழையான தகவல்கள் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டதன் பின்னர் எண்பிக்கப் பட்டால் அதற்குரிய நடவடிக்கை முறைகளுக்கு உட்பட்டு சேவையிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

09. வெற்றிடத்தை நிரப்பும் அல்லது நிரப்பாமல் விடும் உரிமை அரராசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு உரியதாகும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

டப்ளியூ. டப்ளியூ. எஸ். மங்கல,
செயலாளர்,
துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு.

துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சு,
இலக்கம் 19,
சைத்திய விதி,
கொழும்பு 01,
2026.05.08.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**துறைமுகம் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் வணிகக் கப்பற்றுறை செயலகத்தில் …………………………… பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான விண்ணப்பம்**

| பெட்டியினுள் உரிய மொழி மூலத்திற்கான இலக்கத்தினை எழுதவும் | |
|---|---|

(சிங்களம்-1/தமிழ்-2/ஆங்கிலம்-3)

| |
|---|

(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

குறிப்பு: விண்ணப்பப்படிவத்தின் மொழிமூலம் மாற்றப்பட முடியாது.

01. விண்ணப்பதாரியின் பெயர்:

    i. முதலெழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) : …………………………………………………………………..........

    (உ.ம் - GUNAWARDHANA,H.M.S.K. (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்))

    ii. முழுப் பெயர் (திரு./திருமதி/செல்வி):……………………………………………………..………………………………………

    (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்))

    iii. முழுப் பெயர்:……………………………………………………………………………….………………………………

    (சிங்களத்தில்/தமிழில்)

02. முகவரி மற்றும் தொலைபேசி இலக்கம்:

    i அலுவலக முகவரி: ………………………………………………………………………..…………………………………

    தொலைபேசி இலக்கம்: ………………………………………………………..……………………………………

    ii நிரந்தர முகவரி:……………………………………………………………………………….…………………………

    தொலைபேசி இலக்கம்:……………………………………………………………...……………………………………

    கையடக்கத் தொலைபேசி இலக்கம்:…………………………………………………………………………………

03. பிறந்த திகதி:

    ஆண்டு:……………………. மாதம்:……………….. திகதி:…………………………………………………………………

04. 2026 இல் (விண்ணப்ப முடிவுத் திகதியில்) வயது:

    வருடங்கள் :…………………. மாதங்கள் :…..................……………. நாட்கள்:…………………………………………

05. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம்:……………………………………………………..……………………………………

06. பால்:…………………………………………..

07. விவாக அந்தஸ்து :………………………………..

08. கல்வித் தகைமை :

| *தகைமை* | *தகைமை பெற்றுக்கொண்ட வருடம்* | *பாட விதானம்* | *தரம்* | *நிறுவனத்தின் பெயர்* | *குறிப்புக்கள்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

09. தொழிற் தகைமைகள் :

| *தகைமை* | *தகைமை பெற்றுக்கொண்ட வருடம்* | *பாடப் பிரிவு* | *தரம்* | *நிறுவகத்தின் பெயர்* | *குறிப்புக்கள்* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

10. அனுபவம் தொடர்பான விபரங்கள் (வகுப்பு 1 சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னர்)

அ. நிறுவக ரீதியான அனுபவம் :

| *நிறுவகம்* | *பதவி* | *பதவிக்குரிய பணிகள் சுருக்கமாக* | *சேவைக் காலம்* | *குறிப்புகள்* |
|---|---|---|---|---|
| | | | | |

ஆ. கடல்சார் தொழிற்றுறை அனுபவம் :

| *கப்பலின் பெயர்* | *கப்பலின் கொள்ளளவு* | *தரம்* | *கடலில் சேவை (வகுப்பு 1 சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னர்)* | | *குறிப்புக்கள்* |
|---|---|---|---|---|---|
| | | | *மாதங்கள்* | *நாட்கள்* | |
| | | | | | |

11. துறை ரீதியான பங்களிப்புக்கள் :
(வெளியீடுகள் மற்றும் புத்தாக்கங்கள்)

12. கணினி தொடர்பிலான தேர்ச்சி :
- i பட்டம் : ……………………………………………………………………………………………………………………….
- ii டிப்ளோமா : ………………………………………………….. …………………………………………………….....
- iii சான்றிதழ்ப் பாடநெறி : ……………………………………… ……………………………………………………

13. தாங்கள் ஏதேனும் குற்றமொன்று சம்பந்தமாக நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா? ………………
……………………………………………………………………………………………………………………………...............

என்னால் இந்த விண்ணப்பப்படிவத்தில் வழங்கப்பட்டிருக்கும் தகவல்கள் உண்மையானவையெனவும் பிழையற்றவையெனவும் அனைத்துப் பகுதிகளும் உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளன எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் ஏதாவது உண்மையற்றவையென நியமனம் வழங்க முன்னர் தெரியவந்தால் எனது பரீட்சார்த்தத் தன்மை இல்லாதொழியும் எனவும் இந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டதன் பின்னர் இத்தவறு தெரியவந்தால் பணிநீக்கத்திற்கு ஆளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

……………………… ……………………….............……
திகதி விண்ணப்பதாரியின் கையொப்பம்

14. விண்ணப்பதாரியின் கைபொப்பத்தை உறுதிப்படுத்தல் :

இவ் விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ………………………. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்றும், அவர் …………………. ஆந் திகதி என் முன்னிலையில் தமது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன்.

உறுதிப்படுத்துபவரின் பெயர்:
பதவி :
முகவரி :
திகதி:

15. திணைக்களத் தலைவரின் பரிந்துரை
(அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரம்)

இந்த அமைச்சில்/திணைக்களத்தில்/நிறுவனத்தில் கடமையாற்றும் திரு./திருமதி/செல்வி …………………………… தற்போது ………………… பதவியில் கடமையாற்றுகிறாரெனவும் அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் துல்லிய மானவையெனவும், அவருடைய வேலை மற்றும் வரவு திருப்திகரமானதெனவும் அவர் மீது எந்தக் குற்றச்சாட்டும் இல்லை யெனவும் உறுதிப்படுத்துகிறேன். அவர் இந்தப் பதவிக்குத் தெரிவு செய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கலாம்/ விடுவிக்க முடியாது.

……………………. …………………………………
திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்
(உத்தியோகபூர்வ இலட்சிணை இடவும்)

06-10

---

## சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

## மருத்துவத் துறைக்கான துணை தொழில்கள் சேவைகளில் கதிரியக்க நிபுணர் பதவிக்கான மாற்றுப் பணியிடம் மற்றும் ஒருங்கிணைப்பு பட்டதாரிகள் பணிக்கு பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு - 2026

1. சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் மருத்துவப் பயிற்சிக்கான துணைத் தொழில் சேவையில் கதிரியக்கவியலாளர் பதவிக்கு, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக்கழகம் அல்லது நிறுவனத்திலிருந்து பட்டம் பெற்ற பின்வரும் தகைமைவாய்ந்த இலங்கை குடிமக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப் படுகின்றன.

2. பதவிக்குத் தொடர்புடைய கல்வி மற்றும் பிற சிறப்புத் தகைமைகள்:

(அ) கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ் (உயர்தர) தேர்வில் இரண்டு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும் அதில் இயற்பியலில் சிறப்புத் தேர்ச்சியும், ஒருங்கிணைந்த கணிதம், உயிரியல், வேதியியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களும் அடங்கும்.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் ரேடியோகிராபி அல்லது கதிரியக்க சிகிச்சை துறையில், 120 Credit - களுக்கு மேற்பட்ட சிறப்பு பட்டப்படிப்பை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

(இ) இலங்கை மருத்துவ சபையில் பதிவு செய்திருக்க வேண்டும்.

3. **பிற பொதுத் தகைமைகள்:**

(அ) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தப் பகுதியிலும் பணியாற்ற விருப்பமுள்ளவராக இருக்க வேண்டும்.

(ஆ) பதவியின் கடமைகளைச் செய்வதற்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதியுடையவராக இருக்க வேண்டும்.

(இ) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(ஈ) விண்ணப்பதாரர்கள் சிறந்த நன்னடத்தை உடைய வர்களாக இருக்க வேண்டும்.

(உ) 2026.07.01 திகதியன்று 18 வயதுக்குக் குறை யாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

(ஊ) சம்பந்தப்பட்ட பட்டம் நடைமுறைக்கு வரும் திகதியானது, விண்ணப்பங்கள் பெறுவதற்கான இறுதித் திகதிக்கு குறைந்த பட்சம் ஒரு நாள் முன்னதாக இருக்க வேண்டும்.

(எ) விண்ணப்பங்கள் கோரும் அறிவிப்பில் குறிப் பிடப்பட்டுள்ள திகதியன்று, அனைத்துத் தகைமை களையும் எல்லா வகையிலும் பூர்த்தி செய்திருக்க வேண்டும். மேலும், விண்ணப்பதாரர்கள் தங்கள் தகைமைகளை நிரூபிக்க, விண்ணப்பப்படிவத்துடன் தொடர்புடைய சான்றிதழ்களின் நகல்களையும் சமர்ப்பிக்க வேண்டும்.

4. **விண்ணப்பிக்கும் முறை**:

(அ) விண்ணப்பப்படிவமானது, இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தின்படி தயாரிக்கப்பட வேண்டும் மற்றும் அதற்கு A4 அளவு கடதாசியைப் பயன்படுத்த வேண்டும். (01 முதல் 07 வரையிலான எண்கள் முதல் பக்கத்திலும், 08 முதல் 13 வரையிலான எண்கள் இரண்டாம் பக்கத்திலும், 14 முதல் 15 வரையிலான எண்கள் மூன்றாம் பக்கத்திலும் இருக்க வேண்டும்).

(ஆ) இலங்கை தப்ரொபேன் கிளையில் 7041318 “சுகாதார செயலாளர் பரீட்சை கட்டணம் அறவிடல்” கணக்கிலத்திற்கு ரூபா 1,000.00 செலுத்தி பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டினை விண்ணபத்தின் உரிய இடத்தில் கழறாத வண்ணம் ஒட்டுதல் வேண்டும் (ஒட்டுவதற்கு முன் அதன் பிரதியொன்றை வைத்துக்கொள்ளவும்.)

(இ) விண்ணப்பப்படிவத்தில் உள்ள விண்ணப்பதாரரின் கையொப்பம், ஒரு அரசாங்கப் பாடசாலை அதிபர் அல்லது சமாதான நீதவான் அல்லது சத்தியபிரமாண ஆணையாளர் அல்லது ஒரு வழக்கறிஞர் அல்லது ஒரு நொத்தாரிசு அல்லது முப்படைகளின் அதிகாரி அல்லது காவல் துறையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பதவி வகிக்கும் அதிகாரி அல்லது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க பணியில் நிரந்தரப் பதவியில் ஆண்டொன்றுக்கு திரட்டிய சம்பளமாக ரூ. 854,880.00 க்கு மேல் பெறும் அதிகாரி ஒருவரால் சான்றளிக்கப்பட வேண்டும்.

(ஈ) முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், 9 x 4 அளவுள்ள கடித உறையில் இடப்பட வேண்டும். அந்த உறையின் மேற்புற மூலையில் “துணை மருத்துவத் தொழில்கள் சேவையில் கதிரியக்கவியலாளர் பதவிக்கான பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு - 2026” எனத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டு, சம்பந்தப்பட்ட பட்டம் மற்றும் கல்வி ஆண்டு குறிப்பிடப்பட்டு, பதிவுத் தபால் மூலம் “இயக்குநர் (நிர்வாகம்) 02, சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, இல. 106, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 08” என்ற முகவரிக்கு 2026.07.01 ஆந் திகதிக்கு முன்னதாகவோ அல்லது அன்றோ அனுப்பப்பட வேண்டும்.

5. அரசாங்க அல்லது பகுதி - அரசாங்க நிறுவனங்களின் அலுவலர்கள் தங்களது நிறுவனத் தலைவர் மூலமாக விண்ணப்பங்களை அனுப்ப வேண்டும்.

6. உரிய திகதிக்குப் பிறகு பெறப்படும் விண்ணப்பங் களுக்கு ஒப்புதல் அளிக்கப்படாது மற்றும் அவை நிராகரிக்கப்படும். இந்த அறிவிப்பில் குறிப்பிடப் பட்டுள்ள தேவைகள் மற்றும் வடிவத்திற்கு இணங்காத விண்ணப்பங்கள் முன்னறிவிப்பின்றி நிராகரிக்கப்படும்.

7. பட்டதாரிகளின் பட்டங்கள் நடைமுறைக்கு வரும் திகதி மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட பட்டதாரிகளின் தரப்புள்ளி சராசரி (GPA) ஆகியவற்றின் அடிப்படையில் தகைமைப் பட்டியல் தயாரிக்கப்பட்டு, பயிற்சிப் பாட நெறிக்குத் தகைமையான விண்ணப்பதாரர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இந்தப் பட்டதாரிகளின் ஆட்சேர்ப்பு தொடர்பாக முன்னர் வெளியிடப்பட்ட வர்த்தமானிப் பத்திரிகையில் (2024/07/05) விண்ணப்பங் களைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி திகதிக்குப் பின்னர் பட்டம் பெற்ற விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

8. வெற்றிட எண்ணிக்கையை விட அதிகமான பட்ட தாரிகள் விண்ணப்பித்திருந்தால், மாற்று மற்றும் சரி செய்தல் பயிற்சிக்கான ஆட்சேர்ப்புக்காக, பொது அறிவு மற்றும் திறனறிவு குறித்த 01 மணி நேர வினாத்தாளைக் கொண்ட எழுத்துத் தேர்வு நடாத்தப்படும். மேலும், அந்தத் தேர்வில் காட்டிய தகைமையின் அடிப்படையில்,ஒதுக்கப்படக்கூடிய வெற்றிட இடங்களின் எண்ணிக்கைக்குச் சமமானவர்கள் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார்கள்.

9. நேர்முகப் பரீட்சையின் போது, விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் மூலப் பிரதிகளையும் அவற்றின் சான்றளிக்கப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பிக்க வேண்டும் :

I. பிறப்புச் சான்றிதழ்

II. பட்டச் சான்றிதழின் மூலப் பிரதி (இதன் சான்றளிக்கப்பட்ட பிரதியும் விண்ணபத்துடன் இணைக்கப்பட வேண்டும்).

III. விரிவான பட்டச் சான்றிதழின் (Transcript) மூலப் பிரதி

IV. க.பொ.த. (உ/ த) தேர்வு முடிவுச் சான்றிதழின் மூலப் பிரதி

V. தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லு படியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

VI. மருத்துவ மன்றத்தில் (SLMC) பதிவு செய்ததற்கான சான்றிதழ்

10. **பயிற்சி நடைமுறை**:

I. நேர்காணல் செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களி லிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், ஆங்கில மொழி மூலப் பாடத்தில் திருத்த மற்றும் தகவமைப்புப் படிப்பை மேற்கொள்வதற்காக 06 மாத காலத்திற்கு மருத்துவமனைகள் மற்றும் பிற நிறுவனங்களுடன் இணைக்கப்படுவார்கள்.

II. பயிற்சி பெறுபவர்கள், சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் அவ்வப்போது விதிக்கப் படும் பிற விதிமுறைகளுக்கும் உட்பட் டிருப்பார்கள்.

III. பயிற்சிக் காலத்தின் முடிவில், பயிற்சியை வெற்றி கரமாக முடிக்காதவர்கள், யாருடைய பணியும் நடத்தையும் திருப்திகரமாக இல்லையோ அல்லது அவர்கள் இணைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பணியிலும் நடத்தையிலும் திருப்தி அடையாத வர்கள் பணி நீக்கம் செய்யப்படுவார்கள்.

IV. பயிற்சிக் காலத்தில், பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் விதிகளின்படி பயிற்சியாளர்களுக்குப் படிகள் வழங்கப்படும்.

V. பயிற்சியில் சேரும் நேரத்தில், பயிற்சியாளர், பயிற்சியை வெற்றிகரமாக முடிப்பதற்கும், பயிற்சி வகுப்பைக் கைவிடாமல் இருப்பதற்கும், மற்றும் பயிற்சி முடிந்த பிறகு உரிய பதவிக்கு நியமிக்கப்பட்டால், குறைந்தபட்சம் ஐந்து (05) ஆண்டுகள் அந்தப் பதவியில் பணியாற்றுவதற்கும் சுகாதாரச் செயலாளருடன் ஒரு ஒப்பந்தம் மற்றும் உறுதிமொழியை மேற்கொள்ள வேண்டும். பயிற்சிக் காலத்தில் பயிற்சியை விட்டு விலகினாலோ, பயிற்சிக்குப் பிறகு நியமனத்தை ஏற்காவிட்டாலோ, மேலே உள்ள பிரிவு III-இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி பயிற்சியிலிருந்து நீக்கப்பட்டாலோ அல்லது நியமிக்கப்பட்ட பிறகு ஐந்து (05) ஆண்டுகள் உரிய பதவியில் பணியாற்றத் தவறினாலோ, அவர்/ அவள் பயிற்சிக் காலத்தில் அவருக்கு/அவளுக்கு வழங்கப்பட்ட கொடுப்பனவையும், அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட பராமரிப்பு ஒப்பந்தம் மற்றும் உறுதிமொழி தொடர்பான தொகையையும் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சுக்குச் செலுத்த வேண்டும். இல்லையெனில், ஒப்பந்தத்தின்படி பணத்தை அறவிட சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

11. **சேவையில் இணைத்துக்கொள்வதற்கான விதிமுறைகள்**:

பயிற்சியின் முடிவில், அந்த நேரத்தில் உள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட பதவிக்கு நிரந்தர நியமனம் வழங்குவதா இல்லையா என்பது முடிவு செய்யப்படும். அதன்படி, சுகாதார அமைச்சு சம்பந்தப்பட்ட பதவிக்கு நிரந்தர நியமனம் வழங்க முடிவு செய்தால், விண்ணப்பதாரர்கள் தாங்கள் பயிற்சிக்காகப் பதிவு செய்திருந்த பாட நெறிக்குரிய ஆட்சேர்ப்பு நடைமுறையின் நிபந்தனைகள் மற்றும் பதவி வெற்றிடங்களின் அடிப்படையில், சம்பந்தப்பட்ட பதவியின் மூன்றாம் வகுப்புப் பதவிக்கு நியமிக்கப்படுவார்கள். பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் படி, துணைத் தொழில்கள் சேவையில் உள்ள பதவிகளுக்கு, MT - 6 -2025 - இன் படி, ரூ. 54,120.00 - 10 x 800 - 11 x 1190 - 10 x 1320 - 10 x 1350 - ரூ. 101,910.00 வழங்கப்படும் மற்றும் பொது நிர்வாக சுற்றறிக்கை 10/2025 இன் விதிகளின்படி பணம் செலுத்தப்படும்.

12. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்யும் போது கல்வி மற்றும் பிற தகைமைகள் குறித்த விவரங்களை மிகவும் கவனமாகவும் துல்லியமாகவும் உள்ளிட வேண்டும். பயிற்சி அல்லது நியமனத்திற்கான ஆட்சேர்ப்புக்குப் பிறகு மேற்கூறிய சான்றிதழ்கள் போலியானவை என நிரூபிக்கப்பட்டால், சட்ட நடவடிக்கைக்காக அவர்களைக் குற்றப் புலனாய்வுத் துறைக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும், வழங்கப்பட்ட நியமனம் இரத்து செய்யப்படும், இது தொடர்பாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட பிறகு அரச பணியில் மீண்டும் பணியமர்த்தப்படாதவர்களின் கறுப்புப் பட்டியலில் அவரது பெயர் சேர்க்கப்படும். மேலும், பயிற்சிக் காலத்தில் அவருக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை, செலவினங்கள் மீதான ஒப்பந்தம் தொடர்பான தொகை மற்றும் அரசாங்கத்தால் பெறப்பட்ட உத்தரவாதம் ஆகியவற்றை அவரிடமிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கப்படும்.

13. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள், தொடர் புடைய பாடத்திட்டத்தைப் பின்பற்றவும், தீவின் எந்தப் பகுதியிலும் பணியாற்றவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகைமையுடையவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக, பயிற்சியின் முதல் மாதத்திற்குள் ஒரு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும். மருத்துவப் பரிசோதனையில் தகைமையற்றவர்கள் எனக் கண்டறியப்படும் விண்ணப்பதாரர்கள், பாடத் திட்டத்தைத் தொடர்வதிலிருந்து தகைமை நீக்கம் செய்யப் படுவார்கள்.

14. மேலே குறிப்பிட்டவாறு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அனைவரும், அரசாங்க ஊழியர்களுக்குப் பொருந்தக் கூடிய அனைத்து விதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும், சுகாதார அமைச்சினால் பரிந் துரைக்கப்பட்ட கொள்கைகளுக்கும், நிதி ஒழுங்கு முறைகள் மற்றும் பிற ஒழுங்குமுறைகளுக்கும், மற்றும் அரசாங்கத்தால் அவ்வப்போது விதிக்கப்படும் விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளுக்கும் உட்பட்டவர்கள் ஆவர்.

15. பயிற்சிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு குடியிருப்பு வசதிகளை வழங்க இந்த அமைச்சு கடமைப்பட்டிருக்கவில்லை. அவ்வாறு வழங்கப்பட்டால், அதற்கான மதிப்பிடப்பட்ட அறை வாடகை, தண்ணீர் மற்றும் மின்சாரக் கட்டணங்கள் அறவிடப்படும்.

16. பயிற்சிக்கான ஆட்சேர்ப்பு தொடர்பான இந்த வர்த்தமானி அறிவிப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள அல்லது உள்ளடக்கப்படாத எந்தவொரு விடயம் தொடர்பாகவும் ஏதேனும் தகராறு ஏற்பட்டால், சுகாதார அமைச்சின் செயலாளரின் முடிவே இறுதியானது. இந்த வர்த்தமானி அறிவிப்பின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கு இடையே ஏதேனும் முரண்பாடு ஏற்பட்டால், சிங்கள உரையே மேலோங்கும்.

சிறப்பு வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க,
செயலாளர்,
சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

சுகாதாரம் மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
இல. 385, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, கொழும்பு 10,
2026.05.21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மருத்துவத் துறைக்கான துணை தொழில்கள் சேவைகளில் கதிரியக்க நிபுணர் பதவிக்கான மாற்றுப் பணியிடம் மற்றும் ஒருங்கிணைப்பு பட்டதாரிகள் பணிக்கு பட்டதாரிகள் ஆட்சேர்ப்பு - 2026**

(விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்வதற்கு முன் அரசாங்க சுற்றுநிரூபத்தை கவனமாகப் படிக்கவும்)

1. (அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :..........................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதா. A.B.C. SILVA)
(ஆ) முழுப் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) : ...............................................................................
(இ) முழுப் பெயர் (சிங்களம் / தமிழில்) :..........................................................................................................

2. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ..............................................................................(பிரதியை இணைக்கவும்)

3. அஞ்சல் முகவரி : (சிங்களம் / தமிழில் / ஆங்கிலத்தில்) ...........................................................................................

4. (அ) நிரந்தர முகவரி : (சிங்களம்/தமிழில் /ஆங்கிலத்தில்) ..........................................................................................
..................................................................................................................................................................
..................................................................................................................................................................

(ஆ) தொலைபேசி இல. :

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கைத்தொலைபேசி | | | | | | | | | | |
| நிலையானது | | | | | | | | | | |

(இ) வசிக்கும் மாவட்டம் : சிங்களம் / தமிழில் ............................ ஆங்கிலத்தில் .......................................

(ஈ) நீங்கள் இந்த மாவட்டத்தின் நிரந்தர குடியிருப்பாளரா? ஆம் / இல்லை : .........................................

(உ) ஆம் எனில், எவ்வளவு காலமாக? :..............................................................................................................

5. பிறந்த திகதி : ஆண்டு: ........................... மாதம் :.............................. திகதி:................................
2026.07.01 ஆந் திகதியன்று வயது: ஆண்டுகள் .................. மாதங்கள் ....................... நாட்கள் ......................

6. பாலினம் : ஆண் ☐ பெண் ☐ (பொருத்தமான பெட்டியில் ✓ குறியிடவும்)

7. நீங்கள் இலங்கையின் குடிமகனா : ஆம் ☐ இல்லை ☐ (பொருத்தமான பெட்டியில் ✓ குறியிடவும்)

8. திருமண நிலை : திருமணமானவரா ☐ திருமணமாகாதவரா ☐ (பொருத்தமான பெட்டியில் ✓ குறியிடவும்)

9. கல்வித் தகைமை :

| *தொடர் இல.* | *தேர்ச்சி பெற்ற பட்டம்* | *தரப்புள்ளி* | *சராசரி (GPA) மற்றும் பட்டம் பெற்ற திகதி* | *பல்கலைக்கழகம்* | *கல்வி ஆண்டு* |
|---|---|---|---|---|---|
| | | | | | |

10. இலங்கை மருத்துவ மன்ற (SLMC) பதிவு எண் மற்றும் திகதி :..............................................

11. எழுத்துத் தேர்வு நடாத்தப்பட்டால், நீங்கள் எந்த மொழி மூலம் தோன்ற விரும்புகிறீர்கள் :...............................

12. எப்போதாவது ஏதேனும் குற்றத்திற்காக நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டீர்கள்? ஆம் ☐ இல்லை ☐

(பொருத்தமான பெட்டியில் குறியிடவும்.)

“ஆம்” எனில், விவரங்களை வழங்கவும்:...................................................................................................................

13. விண்ணப்பதாரரின் உறுதிமொழி:

(அ) நான் அரசாங்க சுற்றுநிருப அறிவிப்பைப் படித்துப் புரிந்துகொண்டேன் என்றும், அதில் கூறப்பட்டுள்ள அனைத்து நிபந்தனைகளுக்கும் உட்பட்டு இந்த விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்துள்ளேன் என்றும், இந்த விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்ட தகவல்கள் எனது அறிவுக்கு எட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என்றும் உறுதியாக அறிவிக்கிறேன்.

(ஆ) என்னால் கூறப்பட்ட ஏதேனும் கூற்றுகளோ அல்லது விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் தகவல்களோ பொய்யானவை எனக் கண்டறியப்பட்டால், நான் பணியிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுவேன் என்பதையும் நான் புரிந்துகொள்கிறேன்.

தயவுசெய்து உரிய தொகையை, இலங்கை வங்கி, தப்ரபேன் கிளையில் உள்ள சுகாதாரச் செயலாளர் பரீட்சைக் கட்டண அறவிடல் கணக்கு இல. 7041318 இல் செலுத்தி, பற்றுச்சீட்டினை கழறாதவாறு இந்த இடத்தில் ஒட்டவும்.

…….................................. .............................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

14. விண்ணப்பதாரரின் கையொப்பத்திற்கான சான்றளிப்பு:

இந்த விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி........................................ எனக்கு தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர்....................................... திகதியில் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் என்றும் இதன்மூலம் சான்றளிக்கிறேன்.

…….................................. .............................................

திகதி சான்றளிப்பவரின் கையொப்பம்

சான்றளிப்பவரின் அதிகாரபூர்வ முத்திரை

சான்றளிக்கும் அதிகாரியின் முழுப் பெயர்: ...................................................................................................................

பதவி: ...........................................................................................................................................................................

முகவரி: ........................................................................................................................................................................

15. விண்ணப்பதாரர் ஒரு அரசாங்க ஊழியர் / மாகாண அரசாங்க ஊழியராக இருந்தால், திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (பொருந்தாத சொற்களை அடித்துவிடவும்.)

i. மேற்குறித்த விண்ணப்பதாரர், திரு. / திருமதி/ செல்வி ........................................., இந்தத் திணைக்களத்தில் ............ .................................. பதவியை வகிக்கிறார் என்று இதன்மூலம் சான்றளிக்கிறேன்.

ii. விண்ணப்பப்படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என்றும், அவர் / அவள் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால், அவர் /அவள் வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்கப்படலாம் அல்லது விடுவிக்கப்படாமலும் இருக்கலாம் என்றும் சான்றளிக்கிறேன்.

iii. மேலும், இந்த ஆட்சேர்ப்பு ஒரு வெளிவாரி ஆட்சேர்ப்பு என்பதையும், அவர் சம்பந்தப்பட்ட பயிற்சியை வெற்றிகரமாக முடித்தாலும் முடிக்காவிட்டாலும், பின்னர் எந்த வகையிலும் தற்போதைய பதவிக்கு மீண்டும் வர முடியாது என்பதையும் நான் அவருக்குப் புரிய வைத்துள்ளேன்.

................................................ ............................................................
திகதி திணைக்களத் தலைவரின் கையொப்பம்

திணைக்களத் தலைவரின் பெயர் : ..............................................................................................................................

பதவி : ...............................................................................................................................................................

முகவரி : ...........................................................................................................................................................

திணைக்களத் தலைவரின் அதிகாரப்பூர்வ முத்திரை

06-22

---

## சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

## பகிரங்க சேவைகள் ஆணைக் குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டி

## சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் (பிரதான சட்ட உத்தியோகத்தர்) பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2025

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் பிரதான சட்ட உத்தியோகத்தர் பதவியில் காணப்படும் வெற்றிடத்தினை நிரப்பும் பொருட்டு தகுதியானவர்களை தெரிவு செய்வதற்காக பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டியின் கட்டளைக்கமைய, அரசாங்க சேவையில்/ மாகாண அரசாங்க சேவையில் நிறைவேற்று சேவை வகையின் I ஆம் தரத்தைச் சார்ந்த தகைமைகளையுடைய சட்ட உத்தியோகத்தர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப்படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழ்க் குறிப்பிடப்படும் திகதி அல்லது அதற்கு முன்னர் “பணிப்பாளர் (நிர்வாகம்) 07, இல. 106, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 08” எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் (பிரதான சட்ட உத்தியோகத்தர்) பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2025” என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதி 2026.07.03 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு**: விண்ணப்பமொன்று அல்லது அது தொடர்பிலானதோர் கடிதம் தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாக மேற்கொள்ளப் படும் முறைப்பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்படமாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களை தாமதப்படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகளே பொறுப்பாவர்.

01. **ஆட்சேர்க்கும் முறை :**

அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளுள் பொதுச்

சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டியினால் அங்கீகரிக்கப்படுகின்ற நேர்முகப் பரீட்சை சபையினால் நடாத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அதிகூடிய புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரி வெற்றிடத்திற்கு ஆட்சேர்க்கப்படுவார். அவ்விடத்தே, பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டியினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ்க் குறிப்பிடப்படும்) புள்ளி வழங்கும் நடைமுறையின் கீழ்க் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும். இந்தப் பதவிக்கு I ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர்களில் இருந்து சேவை அனுபவம் மற்றும் திறமையின் அடிப்படையில் நியமிக்கப்படுவார்கள். சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சில் பிரதான சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு தகைமைகள் கொண்ட உத்தியோகத்தர்கள் இல்லாத போது அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் நிறைவேற்று சேவை வகையின் I ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர்களில் இருந்து சேவை அனுபவம் மற்றும் திறமை அடிப்படையில் ஆட்சேர்க்கப்படுவார்கள்.

02. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

I. இந் நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டது. தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசினால் எதிர்காலங்களில் மேற் கொள்ளப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங் களுக்கு தாங்கள் கட்டுப்படுதல் வேண்டும். மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு/தபுதாரர் மற்றும் அநாதைகள் ஓய்வூதியத் திட்டத்தற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும். அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் வண்ணம் தங்களால் அதற்கான பங்களிப்புத் தொகைகளை செலுத்துதல் வேண்டும்.

II. இப் பதவியில் நியமனம் பெறும் உத்தியோகத்தர்கள் ஒரு வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுவார்கள்.

III. இந் நியமனம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவைக்கும், அரசாங்க நிதிப் பிரமாணங்களுக்கும், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் (சட்ட உத்தியோகத்தர்/பிரதான சட்ட உத்தியோகத்தர்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள மீளாய்வுகளுக்கும், ஏனைய திணைக்களம் சார் கட்டளைகளுக்கும் உட்படுகின்றது.

03. **தகைமைகள் :**

**குறிப்பு 01**:

தகைமைகள் கருத்திற் கொள்ளப்படுவது விண்ணப் பங்களை கோருகின்ற இறுதித் திகதியில் ஆகும்.

3.1 **தொழில்சார் தகைமைகள் :**

அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவை யில் நிறைவேற்று சேவை வகையின் I ஆம் தர சட்ட உத்தியோகத்தர் ஆதல்.

3.2 **உடலியல் தகைமைகள் :**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவோரு பிரதேசத்தில் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதி யளவு உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

3.3. **ஏனைய தகைமைகள் :**

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.
II. விண்ணப்பதாரிகள் சிறந்த ஒழுக்கமுடைய வராதல் வேண்டும்.
III. சேவையில் நிரந்தரப்படுத்தியிருத்தல் வேண்டும்.
IV. விண்ணப்பங்களை கோரும் அறிவித்தலில் குறிப்பிடப்படுகின்ற திகதியில் விண்ணப்பதாரி களினால் தேவையான அனைத்து தகைமை களையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.
V. ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சியினைப் பெற்றிருத்தல்.

04. **வயதெல்லை**: ஏற்புடையதாகாது.

05. **சம்பள அளவுத்திட்டம்**:

25.03.2025 ஆந் திகதியுடைய 10/2025 இலக்கம் கொண்ட பொதுநிர்வாகச் சுற்றுநிருபத்தின் உப அட்டவணை II இன் படி இந்த பதவிக்குரிய மாதாந்த சம்பளப் பரிமாணம் ரூ. 133,750.00 - 16 x 3900 - 195,970.00 (SL-01-2025) (I ஆம் தரத்தின்) ஆகும். தங்களுக்கு சம்பளம் வழங்கப்படுவது குறித்த சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கு அமைவாக அதன் உப அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள வண்ணம் ஆகும்.

06. கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்காக கீழ்க் குறிப் பிடப்படும் புள்ளி வழங்கும் நடைமுறை அடிப்படையாக கொள்ளப்படும் :

| *பரீட்சித்து புள்ளிகள் வழங்கப்படும் பிரதான துறைகள்* | | | *உச்ச புள்ளிகள்* | *தெரிவு செய்வதற்காக கருத்திற் கொள்ளப்படும் குறைந்து புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|---|
| 01. | சேவை அனுபவம் :<br><br>I ஆம் தர சேவைக் காலத்திற்காக ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம், 06 மாதங்களுக்கு 2.5 புள்ளிகள்இ 03 மாதங்களுக்கு 1.25 புள்ளிகள். | 30 | 50 | |
| 02. | திறமை<br>i. கல்வித் தகைமைகள் (உச்ச அளவு)<br>- ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைகழக மொன்றில் இருந்து சட்டம் தொடர்பில் பெற்றுக் கொண்ட<br>- கலாநிதி (PhD) பட்டத்திற்கு உச்ச அளவு<br>- பட்டப்பின் பட்டத்திற்கு உச்ச அளவு<br>- பட்டப்பின் டிப்ளோமாவிற்கு உச்ச அளவு | <br><br><br>12<br>10<br>08 | 30 | கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமையின் அடிப்படையில் அதிக புள்ளிகளை பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரி ஆட்சேர்க்கப்படுவார். |
| | ii. சட்டத்துறை தொடர்பில் காட்டும் திறமை<br>- விடயத்துடன் தொடர்புறும் வண்ணம் நேர்முகப் பரீட்சையின் போது வழங்கப் படும் சட்டச் சிக்கலைத் தீர்த்தல்<br>- சட்டத்துறையின் நவீன போக்குகள் பற்றிய அறிவு | <br>07<br><br>03 | 10 | |
| | iii. நேர்முகப் பரீட்சையின் போது காட்டும் திறமை<br>- பொது அறிவு மற்றும் நுண்ணறிவு<br>- தெளிவாக கருத்துக்களை வெளியிடும் ஆற்றல் மற்றும் ஆளுமை. | <br>05<br>05 | 10 | |
| மொத்தப் புள்ளிகள் | | 100 | 100 | |

**குறிப்பு 02:**
தகைமைகள் கருத்திற் கொள்ளப்படுவது விண்ணப்பங்களை கோருகின்ற இறுதித் திகதியில் ஆகும்.

07. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம்**

அனைத்து விதங்களிலும் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ளார்கள் என முன் தீர்மானிக்கப்படும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.

நேர்முகப் பரீட்சையின் போது அனைத்துச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மற்றும் தகுந்த வண்ணம் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ்க் குறிப்பிடப்படும் அடையாள அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும:

I. தேசிய ஆளடையாள அட்டை ;
II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு ;
III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்.

08. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

I. சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப்படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகளினால் அவர்களது விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயார் செய்து முதல் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 05 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 06 முதல் 08 வரையிலும், ஏனைய விடயங்களை அடுத்த பங்கங்களிலும் அமையும் வண்ணம் தயாரித்து தமது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும்.

II. விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதி 2026.07.03 ஆகும். விண்ணப்பங்களை 2026.07.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் "பணிப்பாளர் (நிர்வாகம்) 07, இல. 106, டட்லி சேனநாயக்க மாவத்தை, கொழும்பு 08" எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

III. விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் பிரதான சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2025" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

IV. இது தொடர்பிலான எதிர்கால கடிதப் பரிமாற்றங்கள் மின்னஞ்சல் மூலமாகவும் மேற்கொள்ளப்படலாம். ஆதலால் உபயோகத்தில் உள்ள தங்களது மின்னஞ்சல் முகவரியொன்றினைப் பெற்றுத் தரல் கட்டாயமாவதுடன், அது தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

V. அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் நிறுவனத் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

VI. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் படி அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமையுடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முன் தீர்மானத்தின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் முகவரிக்கு அறியத் தரப்படும் (அனைத்து விதங்களிலும் பூரணமான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.)

09. போலியான தகவல்களை வழங்குதல்.

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிருபணமாயின் தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறானதோர் பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிருபணமாயின் அதற்குரிய செயல்முறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் ஏற்படுமாயின், அவ்விடத்தே சிங்கள மொழியிலான வாசகம் செல்லுபடியாதல் வேண்டும்.

11. விண்ணப்பங்களைக் கோரும் இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமோர் விடயம் தொடர்பில் அல்லது அதில் ஏற்பாடுகள் செய்யப்படாத ஏதேனுமோர் விடயம் இருப்பின் அது தொடர்பில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டியினால் முடிவு செய்யப்படும்.

வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
"சுவசிரிபாய",
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10,
2025.05.21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் (பிரதான சட்ட உத்தியோகத்தர்) பதவிக்கு ஆட்சேர்த்தல் - 2025**

வதிவிட மாவட்டம் [ ]

01. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடனான பெயர் : Mr./Mrs/Miss ..........................................................................
..........................................................................

(ஆங்கில் பேரெழுத்துக்களில்) உதாரணம்: Mr./~~Mrs/Miss~~, SILVA A. B.

1.2 முழுப் பெயர் : ..........................................................................

(ஆங்கில் பேரெழுத்துக்களில்) ..........................................................................

1.3 முழுப் பெயர் :..........................................................................

(சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................

02. 2.1 முகவரி (தனிப்பட்ட) : ..........................................................................

(ஆங்கில் பேரெழுத்துக்களில்) ..........................................................................

2.2 முகவரி (தனிப்பட்ட) : ..........................................................................

(சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................

2.3 முகவரி (கடமை) : ..........................................................................

(ஆங்கில் பேரெழுத்துக்களில்) ..........................................................................

2.4 முகவரி (கடமை) : ..........................................................................

(சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................

(அரசாங்க சேவையின்/மாகாண அரசாங்க சேவையின் உத்தியோகத்தர் அவரது கடமை முகவரியினைக் குறிப்பிடுதல் வேண்டும். முகவரியில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அதனை அறிவித்தல் வேண்டும்.)

2.5 தொலைபேசி இலக்கம் (தனிப்பட்ட) : ......................................................

2.6 தொலைபேசி இலக்கம் (அலுவலக) : ......................................................

2.7 மின்னஞ்சல் (Email Address) : ……..................................................

03. 3.1 பிறந்த திகதி :

வருடம் : [ | | | ] மாதம் : [ | ] திகதி : [ | ]

3.2 விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் வயது :

வருடங்கள் :....................... மாதங்கள் :........................ நாட்கள் :.................

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : ......................................................

05. பால் : ......................................................

06. தகைமைகள்: நிறைவேற்று சேவை வகையின் I ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவியில் நியமனம் பெற்ற திகதி: ………………………………..

6.1 சேவை அனுபவம்:

..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................
..........................................................................

6.2 உரிய கல்வித் தகைமைகள்/தகைமை :
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................
..........................................................................................................................................................

07. விண்ணப்பதாரியின் உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் உள்ளடங்கியுள்ள ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது எனக் கண்டுபிடிக்கப்பட்டால், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அந்த விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி:..........................................                ...........................................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

08. **நிறுவனத் தலைவரின் பரிந்துரை:**

i. விண்ணப்பதாரியினால் பெறப்பட்டுள்ள பாராட்டுக்கள் மற்றும் தண்டனைகள் பற்றிய விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| *பாராட்டுக்கள் மற்றும் தன்மை* | *பாராட்டினைப் பெற்றுள்ள திகதி* | *தண்டனை மற்றும் தன்மை* | *தண்டனையினை பெற்றுள்ள திகதி* |
|---|---|---|---|
| | | | |
| | | | |

ii. விண்ணப்பதாரியின்,
வேலை : மிக நன்று /நன்று /சாதாரணமானது /திருப்திகரமானது.
நடத்தை : மிக நன்று /நன்று /சாதாரணமானது /திருப்திகரமானது.
வரவு : மிக நன்று /நன்று /சாதாரணமானது /திருப்திகரமானது.

iii. விடுமுறை விபரங்கள்
அமைய ஓய்வு அரைச் சம்பள சம்பளமற்ற
............. ............ ................. ................

விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் மற்றும் என்னால் வழங்கப்பட்டுள்ள அனைத்து தகவல்களும் சரியானவை என இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: .....................................

.............................................
நிறுவனத் தலைவரின் கையொப்பம்
பதவி:
பதவி முத்திரை:

09. திணைக்கள/நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல் : (அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும்)

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ...................................................... இத் திணைக்களத்தில்/மாகாண சபையில்/நிறுவனத்தில் ...................... ஆந் திகதி முதல் சேவையாற்றுகின்றார். அவர் நிரந்தர ஓய்வூதியம் கொண்ட/

தற்காலிக பதவியினை வகிக்கின்றார். அவர் கடந்த .......... வருட காலப்பகுதியினுள் அனைத்து சம்பளவேற்றங்களையும் உழைத்துப் பெற்றுள்ளார் என்பதனையும், அவர் ஏதேனுமோர் ஒழுக்காற்றுத் தண்டனைக்கு (எச்சரித்தல் தவிர்ந்த) உட்படுத்தப்படவில்லை என்பதனையும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் இந்த அலுவலகத்தில் உள்ள அறிக்கைகளின் அடிப்படையில் பரிசோதிக்கப்பட்டன எனவும், அவை சரியானவை எனவும், அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/முடியாது எனவும் ................... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

.....................................................................
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : .........................................................................................................

பதவிப் பெயர் : .........................................................................................................

திகதி : .........................................................................................................

திணைக்களம் /நிறுவனம் : .......................................................................................

(இறப்பர் முத்திரையினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்)

06-29/1

---

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு**

**பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டி**

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் III ஆம் தர சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2025**

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் III ஆம் தர சட்ட உத்தியோகத்தர் பதவியில் காணப்படும் 01 வெற்றிடத்தினை நிரப்பும் பொருட்டு தகைமையுடையவர்களை தெரிவு செய்வதற்காக பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டியின் பணிப்புரையின் படி தகுதியுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்த அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரிப் படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை கீழ் குறிப்பிடப்படும் திகதி அல்லது அதற்கு முன்னர் “செயலாளர், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, (நிர்வாகம்) 07 ஆம் பிரிவு, இலக்கம் 106, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08” எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் III ஆம் தர சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2025 என தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

(அ) விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதி 2026.07.03 ஆந் திகதி ஆகும்.

**குறிப்பு:** விண்ணப்பமொன்று அல்லது அது தொடர் பிலானதோர் கடிதம் தபாலில் காணாமற் போனதாக அல்லது தாமதமானதாக மேற்கொள்ளப்படும் முறைப் பாடுகள் தொடர்பில் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் திகதி வரையில் விண்ணப்பங்களை தாமதப் படுத்துவதன் மூலம் ஏற்படக் கூடிய இழப்புக்களை விண்ணப்பதாரிகளே தாங்குதல் வேண்டும்.

01. **ஆட்சேர்க்கும் முறை :**

விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதியாகுகையில் தேவையான அனைத்து தகைமைகளையும் பூரணப் படுத்தியுள்ள விண்ணப்பதாரிகளில் இருந்து பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டியினால் நியமிக்கப்படுகின்ற நேர்முக பரீட்சை சபையினால் நடாத்தப்படும் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் படி உச்ச புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் விண்ணப்பதாரி வெற்றிடத்திற்கு ஆட்சேர்க்கப்படுவார். அவ்விடத்தே, பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டியினால் அங்கீகரிக்கப்பட்ட (இலக்கம் 06 இன் கீழ் குறிப்பிடப்படும்) புள்ளி வழங்கும் நடைமுறையின் கீழ் தகைமைகளை மதிப்பீடு செய்யும் நேர்முகப் பரீட்சை நடாத்தப்படும்.

02. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

I. இந் நியமனம் நிரந்தரமானது. ஓய்வூதியம் கொண்டது. மேலும், தாங்கள் விதவைகள் மற்றும் அனாதைகள் ஒய்வூதியத் திட்டத்திற்கு/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்தற்கு பங்களிப்புச் செய்ய வேண்டியதுடன், அரசினால்

அவ்வப்போது விதிக்கப்படும் வண்ணம் தங்களால் அதற்கான பங்களிப்புத் தொகைகளை செழுத்துதல் வேண்டும்.

II. பொது நிர்வாகச் சுற்றுநிருப இலக்கம் 18/2020 இன் படி அரக கரும மொழிகள் பற்றிய குறித்த தேர்ச்சியினை பூரணப்படுத்துதல் வேண்டும்.

III. இந்த நியமனம் 03 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டது. சட்ட உத்தியோகத்தர் III ஆம் தரத்தில் ஆட்சேர்க்கப்பட்டு 03 வருட காலப்பகுதியினுள் ஆட்சேர்ப்பு நடைமுறைகளில் குறிப்பிடப்படும் வண்ணம் முதலாம் வினைத்திறண்காண் தடைப் பரீட்சையில் சித்தி பெறுதல் வேண்டும்.

IV. இந் நியமனம் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் நடைமுறைவிதிகளுக்கும், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவைக்கும், அரச நிதிப் பிரமாணங்களுக்கும், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் நிறைவேற்று சேவை வகையின் (சட்ட உத்தியோகத்தர்/ பிரதான சட்ட உத்தியோகத்தர்) பதவிகளுக்கான ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள மீளாய்வுகளுக்கும், ஏனைய திணைக்களம் சார் கட்டளைகளுக்கும் உட்படுகின்றது.

03. இந்த பதவிக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களைக் கோரும் இறுதித் திகதியாகுகையில் கீழ்வரும் தகைமைகளை பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.

3.1 **கல்வி/ தொழில்சார் தகைமைகள் :**

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்திருத்தல்.

3.2 **அனுபவம் :**

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் 03 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான தொழில்சார் அனுபவத்தினை பெற்றிருத்தல்.

அல்லது

உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்ததன் பின்னர் அரச நிறுவனமொன்றின் சட்டத்துறையில் 03 வருடங்களுக்கு குறையாது கீழ் காட்டப்படும் கருமங்களில் உரிய அனுபவத்தினை பெற்றிருத்தல்.

i. வழக்குகள் தொடர்பான சட்ட நடவடிக்கைகள் மற்றும் சட்டமா அதிபர் திணைக்களத்துடன் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற் கொள்ளுதல்.
ii. ஒப்பந்தங்கள் தொடர்பிலான சட்ட நடவடிக் கைகள்
iii. உரிய சட்டங்கள் மற்றும் கட்டளைச் சட்டங்கள் தொடர்பிலான சட்ட நடவடிக்கைகள்
iv. கட்டளைச் சட்டங்கள், வரைபுகள், சுற்று நிருபங்கள், பிரமாணங்கள் போன்ற சட்ட ரீதியான அவணங்களின் தயாரிப்பு நடவடிக்கைகள்
v. பல்வேறு நியதிச்சட்ட நிறுவனங்களினால் நடாத்தப்படும் சட்ட அல்லது நீதிமன்ற நடவடிக் கைகள் அல்லது பரீட்சிப்பு நடவடிக்கைகள்.

குறிப்பு: செயற்பாட்டு ரீதியிலான தொழில்சார் அனுபவத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு சமர்ப் பிக்கப்படும் ஆவணங்களில் உரிய அனுபவத்தினைப் பெற்றுள்ள காலப்பகுதியினை தெளிவாகக் குறிப்பிட்டு, உறுதிப்படுத்துபவரின் இறப்பர் முத்திரையினை இட்டு ஒப்பமிடுதல் வேண்டும்.

3.3 **உடலியல் தகைமைகள்**

அனைத்து விண்ணப்பதாரிகளும் இலங்கையின் எந்தவொரு பிரதேசத்தில் சேவையாற்றவும், பதவியின் கடமைகளை நிறைவேற்றவும் போதி யளவு உடலியல் மற்றும் உளவியல் ஆரோக்கியம் கொண்டவராயிருத்தல் வேண்டும்.

3.4. **ஏனைய தகைமைகள் :**

I. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாதல் வேண்டும்.
II. விண்ணப்பதாரிகள் சிறந்த ஒழுக்கமுடைய வராதல் வேண்டும்.
III. விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதி யாகுகையில் பதவியில் ஆட்சேர்க்கத் தேவை யான அனைத்து தகைமைகளையும் விண்ணப்ப தாரிகள் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும்.
IV. ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

04. **வயதெல்லை :**

விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியாகுகையில் வயது 21 வருடங்களுக்கு குறையாதவராகவும், 45 வருடங்களுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

05. **சம்பளம் :**

25.03.2025 ஆந் திகதியுடைய இலக்கம் 10/2025 கொண்ட பொது நிர்வாகச் சுற்றுநிருபத்தின் உப அட்டவணை II இன் படி இந்த பதவிக்குரிய மாதாந்த

சம்பளப் பரிமாணம் ரூ. 82,150.00 – 10 x 2,400 – 08 x 2,940 -17 x 3,900 – ரூபா 195,970.00ஆகும். அந்த சுற்றுநிருபத்தின் விதிமுறைகளுக்கு அமைய அதன் உப அட்டவணை II இல் குறிப்பிடப்படும் வண்ணம் சம்பளம் வழங்கப்படும். அதற்கு மேலதிகமாக அங்கீகரிக்கப்பட்ட அரச படிகளும் வழங்கப்படும்.

06. தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சையின் போது கீழ் குறிப்பிடப்படும் புள்ளி வழங்கும் நடைமுறை அடிப்படையாகக் கொள்ளப்படும்.

| *புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள்* | | *உச்ச புள்ளிகளின் அளவு* | *தெரிவு செய்வதற்கு கருத்திற் கொள்ளப்படும் குறைந்த பட்ச புள்ளிகளின் அளவு* |
|---|---|---|---|
| 1. | மேலதிக கல்வித் தகைமைகள் | 20 | ஏற்புடையதல்ல |
| 2. | மேலதிக தொழில்சார் தகைமைகள் | 15 | |
| 3. | மேலதிக தொழில்சார் அனுபவம் | 30 | |
| 4. | தகவல் தொழில்நுட்ப அறிவு | 10 | |
| 5. | மொழித் திறன் | 15 | |
| 6. | நேர்முகப் பரீட்சையில் காட்டும் திறமை | 10 | |
| மொத்தம் | | 100 | |

6.1 தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்குரிய விபரமான புள்ளி வழங்கும் நடைமுறை கீழ்வருமாறு ஆகும் :

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 01 | **மேலதிக கல்வித் தகைமைகள்:** | | 20 |
| | (பட்டம் அல்லது சட்டக் கல்லூரித் தகைமைகளில் ஒன்றுக்காக மட்டும், அதன் கீழான உச்ச தகைமைக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்) | | |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பெற்றுக் கொண்ட சட்டம் தொடர்பான பட்டம். | | |
| | • முதலாம் வகுப்புச் சித்தி | 20 | |
| | • இரண்டாம் வகுப்பின் மேற்பிரிவுச் சித்தி | 15 | |
| | • இரண்டாம் வகுப்பின் கீழ் பிரிவுச் சித்தி | 10 | |
| | (ஆ) சட்டக் கல்லூரியொன்றில் பெற்றுள்ள சட்டம் தொடர்பிலான பட்டம். | | |
| | • சட்டக் கல்லூரி இறுதி ஆண்டில் முதலாம் வகுப்புச் சித்தி | 20 | |
| | • சட்டக் கல்லூரி இறுதி ஆண்டில் இரண்டாம் வகுப்புச் சித்தி | 15 | |
| | (குறிப்பு: கௌரவ சித்தி சகிதம் இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்திருப்பின் மட்டும் மேற்குறித்த புள்ளிகள் வழங்கப்படும்) | | |

| *தொ. இல.* | *விடயம்* | *புள்ளிகள்* | *உச்ச புள்ளிகள்* |
|---|---|---|---|
| 02 | **மேலதிக தொழில்சார் தகைமைகள் :** | | 15 |
| | i. ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சட்டத்துறை தொடர்பிலான பட்டப்பின் பட்டம். | 15 | |
| | ii. ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சட்டத்துறை தொடர்பிலான ஒரு வருடத்திற்கு குறையாத பட்டப்பின் டிப்ளோமா (ஒரு பட்டப்பின் டிப்ளோமாவிற்கு 7.5 புள்ளிகள் வீதம் 15 உச்ச புள்ளிகள்) | 15 | |
| | iii. ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சட்டத்துறை தொடர்பிலான 06 மாதங்களுக்கு குறையாத டிப்ளோமா பாடநெறி (ஒரு டிப்ளோமாவிற்கு 05 புள்ளிகள் வீதம் 15 உச்ச புள்ளிகள்) | 15 | |
| | iv. ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சட்டத்துறை தொடர்பிலான 03 மாதங்களுக்கு குறையாத சான்றிதழ் பாடநெறி (ஒரு பாடநெறிக்கு 03 புள்ளிகள் வீதம் 15 உச்ச புள்ளிகள்) | 15 | |
| 03 | **மேலதிக தொழில்சார் அனுபவம்**<br><br>சட்டத்தரணியாக அரச சேவையில் அல்லது தனியார் துறையிலான அனுபவம்-<br><br>06 மாதங்களுக்கு கூடிய மற்றும் ஒரு வருடத்திற்கு குறைந்த – 02 புள்ளிகள்<br><br>(அடிப்படைத் தகைமைகளைப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான 03 வருட சேவைக் காலம் தவிர்ந்த)<br><br>ஒரு வருடத்திற்கு 05 புள்ளிகள் வீதம் 30 உச்ச புள்ளிகள்<br><br>குறிப்பு – 20 வருடங்களுக்கு குறையாத சேவைக் காலத்தினைப் பூரணப்படுத்தியுள்ள சட்டத்தரணியொருவரிடம் அல்லது சனாதிபதி சட்டத்தரணியொருவரிடம் அல்லது நீதிபதியொருவரிடமிருந்து பெற்றுக் கொண்ட சான்றிதழ் மூலம் மேலதிக அனுபவத்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். | | 30 |
| 04 | **தகவல் தொழில்நுட்ப அறிவு :** | | 10 |
| | (அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டமொன்றிற்காக தகவல் தொழிநுட்பத்தினை பிரதான பாடமொன்றாக பயின்றிருத்தல் | 10 | |
| | (ஆ) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் 01 வருடத்திற்கு குறையாத தகவல் தொழில்நுட்பம் பற்றிய டிப்ளோமா பாடநெறிக்கு அல்லது 1500 மணித்தியாலங்களுக்கு | 08 | |
| | (இ) அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் தகவல் தொழினுட்பம் பற்றிய சான்றிதழ் பாடநெறிக்கு | | |
| | - 06 மாதங்கள்/ 720 மணித்தியாலங்கள் | 06 | |
| | - 03 மாதங்கள்/ 360 மணித்தியாலங்கள் | 04 | |
| | <u>குறிப்பு</u>: உச்ச தகைமைக்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | |

| தொ. இல. | விடயம் | புள்ளிகள் | உச்ச புள்ளிகள் |
|---|---|---|---|
| 05 | **மொழித் திறன்** | | 15 |
| | ஆங்கில மொழிமூலத்தில் பயின்றுள்ள பட்டப்பின் பட்டம்/ பட்டம்/ பட்டப்பின் சட்ட முதுமாணிப் பட்டம்/ சட்டமாணிப் பட்டம் | 15 | |
| | (குறித்த பரீட்சை வினாப்பத்திரங்கள் அனைத்திற்கும் ஆங்கில மொழி மூலத்தில் பதில் வழங்கியிருத்தல் வேண்டும்) | | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய டிப்ளோமா பாடநெறிக்கு (01 வருடம் அல்லது 1500 மணித்தியாலங்கள்) | 10 | |
| | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனமொன்றில் ஆங்கில மொழி பற்றிய சான்றிதழ் பாடநெறிக்கு | | |
| | - 06 மாதங்கள்/ 720 மணித்தியாலங்கள் | 07 | |
| | - 03 மாதங்கள்/ 360 மணித்தியாலங்கள் | 05 | |
| | குறிப்பு: உச்ச தகைமைக்காக மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும். | | |

07. **விண்ணப்பதாரிகளின் ஆளடையாளம் :**

I. அனைத்து விதங்களிலும் தகைமைகளைப் பூரணப்படுத்தியுள்ளார்கள் என முன் தீர்மானிக்கப்படும் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே தகைமைகளை மதிப்பிடும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.
II. நேர்முகப் பரீட்சையின் போது அனைத்துச் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் மற்றும் தகுந்த வண்ணம் உறுதிப்படுத்தப்பட்ட அவற்றின் பிரதிகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
III. நேர்முகப் பரீட்சையின் போது தமது ஆளடையாளத்தினை உறுதிப்படுத்தும் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் அடையாள அட்டைகள் ஏற்றுக் கொள்ளப்படும்.
   I. தேசிய அடையாள அட்டை
   II. செல்லுபடியான வெளிநாட்டுக் கடவுச்சீட்டு
   III. செல்லுபடியான இலங்கை சாரதி அனுமதிப்பத்திரம்

08. **விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் :**

I. சமர்ப்பிக்க வேண்டிய விண்ணப்பத்தின் மாதிரிப் படிவமொன்று இவ் அறிவித்தலின் இறுதியில் காட்டப்பட்டுள்ளது. விண்ணப்பதாரிகளினால் அவர்களது விண்ணப்பங்களை A4 அளவிலான தாளில் தயார் செய்து முதல் பக்கத்தில் இலக்கம் 01 முதல் 06 வரையிலும், இரண்டாம் பக்கத்தில் இலக்கம் 07 முதல் 09 வரையிலும், ஏனைய விடயங்களை அடுத்த பங்கங்களிலும் அமையும் வண்ணம் தயாரித்து தமது கையெழுத்தினால் பூரணப்படுத்துதல் வேண்டும்.

II. விண்ணப்பங்களை கோரும் இறுதித் திகதி 2026.07.03 ஆகும். விண்ணப்பங்களை 2026.07.03 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வண்ணம் "செயலாளர், சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு, (நிர்வாகம்) 07 ஆம் பிரிவு, இலக்கம் 106, டட்லி சேனாநாயக்க மாவத்தை, கொழும்பு 08" எனும் முகவரிக்கு கிடைக்கும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

III. விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் III ஆம் தரத்தின் சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2025" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

IV. இது தொடர்பிலான எதிர்கால கடிதப் பரிமாற்றங்கள் மின்னஞ்சல் மூலமாகவும் மேற்கொள்ளப்படலாம். ஆதலால் உபயோகத்தில் உள்ள தங்களது மின்னஞ்சல் முகவரியொன்றினைப் பெற்றுத் தரல் கட்டாயமாவதுடன், அது தொடர்பில் அவதானத்துடன் இருத்தல் வேண்டும்.

V. அரசாங்க பாடசாலையின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையொன்றின் ஆணை பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையின் வர்த்தமானிப்படுத்தப்பட்ட பதவியொன்றினை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது இலங்கை நிர்வாக சேவையின்/ கல்வி நிர்வாக சேவையின்/ அரச கணக்காளர் சேவையின் ரூ. 854,880.00 இலும் கூடிய வருடாந்த அடிப்படை சம்பளத்தினைப் பெறும் நிரந்தர அரச பதவியொன்றினை வகிக்கும் பதவிநிலை உத்தியோகத்தர் ஒருவரினால் விண்ணப்பதாரியின் ஒப்பம் உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

VI. தற்சமயம் அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை தாம் சேவையாற்றும் நிறுவனத் தலைவரின் ஊடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

VII. இத்துடன் உள்ள மாதிரி விண்ணப்படிவத்தின் படி அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் காணாமற் போதல் அல்லது தாமதமாதல் பற்றிய எந்தவொரு முறைப்பாடும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்படும் தகைமையுடையவர்கள் மட்டுமே விண்ணப்பித்துள்ளார்கள் எனும் முன் தீர்மானத்தின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பியுள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன், அது பற்றி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் முகவரிக்கு அறியத் தரப்படும் (அனைத்து விதங்களிலும் பூரணமான விண்ணப்பங்களை சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவார்கள்.)

09. **போலியான தகவல்களை வழங்குதல் :**

தங்களால் அனுப்பப்பட்ட விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ஏதேனுமோர் தகவல் பொய்யானது அல்லது தவறானது என ஆட்சேர்ப்பதற்கு முன்னர் நிருபணமாயின் தங்களது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படும். அவ்வாறானதோர் பொய்யான அல்லது தவறான தகவல் ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் நிரூபணமாயின் அதற்குரிய செயல்முறைகளின் கீழ் சேவையிலிருந்து நீக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

10. இவ் அறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி வாசகங்களிடையே ஏதேனும் வேறுபாடுகள் ஏற்படுமாயின், அவ்விடத்தே சிங்கள மொழியிலான வாசகம் செல்லுபடியாதல் வேண்டும்.

11. மேலும் இவ் அறிவித்தலின் மூலம் உள்வாங்கப்படாத ஏதேனுமோர் விடயம் இருப்பின் அது தொடர்பில் பொதுச் சேவைகள் ஆணைக்குழுவின் சுகாதார சேவைகள் கமிட்டியினால் முடிவு செய்யப்படும்.

வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்ஹ,
செயலாளர்,
சுகாதார மற்றும் வெகுசன ஊடக
அமைச்சு.

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
"சுவசிரிபாய"
385, வண. பத்தேகம விமலவங்ச தேரோ மாவத்தை,
கொழும்பு 10.
2026.05.21.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் III ஆம் தர சட்ட உத்தியோகத்தர் பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் - 2025**

வதிவிட மாவட்டம் [ ]

01. 1.1 விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடனான பெயர் : Mr./Mrs/Miss ..........................................................................
.............................................................................................................................................
(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) உதாரணம்: Mr./Mrs/Miss, SILVA A. B.

1.2 முழுப் பெயர் : ......................................................................................................................................................

(ஆங்கில் கெப்பிட்டல் எழுத்துக்களில்) ........................................................................................................................

1.3 முழுப் பெயர் :......................................................................................................................................................

(சிங்களத்தில்/தமிழில்) ...........................................................................................................................................

02. 2.1 முகவரி (தனிப்பட்ட) : ..........................................................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ....................................................................................................................

2.2 முகவரி (தனிப்பட்ட) : ..........................................................................................................................................

(சிங்களத்தில்/தமிழில்) ..........................................................................................................................................

2.3 முகவரி (கடமை) : ...............................................................................................................................................

(ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) ....................................................................................................................

2.4 முகவரி (கடமை) : ...............................................................................................................................................

(சிங்களத்தில்/தமிழில்) ......................................................................................

(முகவரியில் மாற்றம் ஏற்படின் உடனடியாக அதனை அறிவித்தல் வேண்டும்.)

2.5 தொலைபேசி இலக்கம் (தனிப்பட்ட) : ....................................................

2.6 தொலைபேசி இலக்கம் (அலுவலக) : ....................................................

2.7 மின்னஞ்சல் (Email Address) : ……..................................................

03. 3.1 பிறந்த திகதி:

ஆண்டு : | | | | | மாதம் : | | | திகதி : | | |

3.2 விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதியில் வயது :
வருடங்கள் :............... மாதங்கள் :....................... நாட்கள் :...............

04. தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் :.....................................................

05. பால் :.....................................................

06. தகைமைகள்:

6.1 உரிய கல்வித் தகைமைகள் :

..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................

6.2 தொழில்சார் தகைமைகள்:

..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................
..................................................................................................................................................................................

07. விண்ணப்பதாரியின் உறுதியுரை :

இந்த விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்ட தகவல்கள் உண்மையானவை மற்றும் சரியானவை என கௌரவத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேன். இதில் உள்ளடங்கியுள்ள ஏதேனுமோர் விபரம் பொய்யானது அல்லது போலியானது என கண்டு பிடிக்கப்பட்டால், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது தெரிவு செய்யப்பட முன்னராயின் அந்த விண்ணப்பம்

இரத்துச் செய்யப்படும் எனவும், தெரிவு செய்யப்பட்டதன் பின்னராயின் எந்தவித நட்டஈடுமின்றி நான் சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றேன்.

திகதி:.......................................... ...........................................................

விண்ணப்பதாரியின் கையொப்பம்

08. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்:

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ......................................... என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் அறிவேன் எனவும், அவர் எனது முன்னிலையில் ............................................ ஆந் திகதி அவரது ஒப்பத்தினை இட்டார் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................

உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்
(இறப்பர் முத்திரையினால் உறுதிப்படுத்தல் வேண்டும்)

முழுப் பெயர் : ..................................................................................................
பதவி : ...................................................................................................
முகவரி : ....................................................................................................

09. திணைக்கள/ நிறுவனத் தலைவரின் உறுதிப்படுத்தல் : (அரசாங்க சேவையில் அல்லது மாகாண அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு மட்டும்)

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ...................................................... இத் திணைக்களத்தில்/ மாகாண சபையில்/ நிறுவனத்தில் ..................... ஆம் திகதி முதல் சேவையாற்றுகின்றார். அவர் இப்பதவிக்கு தெரிவு செய்யப்பட்டால் தற்போது வகிக்கும் பதவியில் இருந்து விடுவிக்க முடியும்/ முடியாது எனவும் ................... ஆந் திகதி அவர் எனது முன்னிலையில் ஒப்பமிட்டார் என்பதனையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

....................................................................

திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் : ...........................................................................................................

பதவிப் பெயர் : ............................................................................................................

திகதி : ..........................................................................................................

திணைக்களம் /நிறுவனம் : .........................................................................................

(இறப்பர் முத்திரையினால் உறுதிப்படுத்துதல் வேண்டும்)

06-29/2

---

**ஆயுர்வேத மருத்துவ சபை**

**சுகாதார மற்றும் ஊடக அமைச்சு**

## நிர்வாக உதவியாளர் தரம் III தொழில்நுட்பம் அல்லாத (MA 1-2) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல் – (தமிழ் மொழி)

சுகாதார மற்றும் ஊடக அமைச்சின் கீழ் இயங்கும் மஹரகம, நாவின்ன இல் அமைந்துள்ள ஆயுர்வேத மருத்துவ சபையில் மேற்குறித்த பதவிக்கு தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இந்தப் பதவி நிரந்தர ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் அறக்கட்டளை நிதிக்கு உரிமை உடையது.

சேர்க்கை தகுதிகள் –

- இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
- பதவிக்கு ஒதுக்கப்படும் பணிகளை சிறப்பாக நிறைவேற்றவும், தீவின் எந்த மாவட்டத்திலும் சேவை செய்யவும் தேவையான உடல் மற்றும் மன ஆரோக்கியம் கொண்டிருக்க வேண்டும்.
- உயரிய குணநலனைப் பெற்றிருக்க வேண்டும்.

**வெற்றிடங்களின் எண்ணிக்கை – 01 (ஒன்று)**

இந்தப் பதவி தமிழ் மொழியில் பணி செய்வதற்காக சேர்க்கப்படுகிறது. இந்தப் பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் தமிழ் மொழி மூலம் பின்வரும் கல்வித் தகுதிகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும், மேலும் சிங்கள மொழி அறிவும் சிறப்பு விஷயமாக கருதப்படும்.

| | |
|---|---|
| **கல்வித் தகுதி** | க.பொ.த. (சாதாரண தரம்) தேர்வில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் சிறப்பு தேர்ச்சி பெற்று, ஒரே நேரத்தில் ஆறு பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். க.பொ.த. (உயர்தர) பொதுத் தேர்வை தவிர்த்து மூன்று பாடங்களில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தது ஆறு (06) மாதங்கள் அலுவலக மென்பொருள் (Microsoft Office) கணினி பாடநெறி கற்றிருத்தல் கூடுதல் தகுதியாக கருதப்படும். (சான்றிதழ்களால் நிரூபிக்கப்பட வேண்டும்) |
| **வயது** | 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேலாகாமலும் இருக்க வேண்டும். |
| **சம்பள அளவு** | அரசாங்க சேவை சுற்றறிக்கை எண் 01/2025 அனுசரணையில் MA 1-2 சம்பள குறியீடு. சம்பள அளவு: ரூ. 46,220 – 10x540 – 7x630 – 12x1,080 – 12x1,280 – 84,350.00 (அரசால் அங்கீகரிக்கப்பட்ட வாழ்க்கைச் செலவு கொடுப்பனவும் உற்சாக ஊதியமும் கூடுதலாக வழங்கப்படும்) 01.01.2026 திகதியன்று ஆரம்ப சம்பளம் ரூ. 43,312.00. |
| **சேர்க்கை முறை** | தகுதி பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படுவர். 03 வருட பரிவீட்சகாலத்திற்கு உட்பட்டு நிரந்தர அடிப்படையில் சேர்க்கை செய்யப்படும். |
| **நியமன அதிகாரி** | தலைவர், ஆயுர்வேத மருத்துவ சபை. |
| **விண்ணப்பிக்கும் முறை** | அனைத்து வாழ்க்கை வரலாறு மற்றும் அனுபவங்கள் உட்பட்டு இத்துடன் இணைக்கப்பட்ட படிவத்தின்படி விண்ணப்பதாரராலேயே விண்ணப்பப் படிவம் தயாரிக்கப்பட வேண்டும். மேற்கண்ட கல்வித் தகுதிகளுக்கு மட்டுமே சம்பந்தப்பட்ட கல்விச் சான்றிதழ்களின் நகல்களும் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும். விண்ணப்பம் வைக்கும் உறையின் மேல் இடது மூலையில் “நிர்வாக உதவியாளர் III தரத்திற்கு சேர்க்கை – ஆயுர்வேத மருத்துவ சபை” என குறிப்பிட்டு 2026, யூலை 03 அன்று அல்லது அதற்கு முன் “தலைவர், ஆயுர்வேத மருத்துவ சபை, நாவின்ன, மஹரகம” என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பப்பட வேண்டும். |

வழிகாட்டுதல்களின்படி அனுப்பப்படாத விண்ணப்பங்கள் அறிவிப்பின்றி நிராகரிக்கப்படும், மேலும் சேர்க்கை தொடர்பான இறுதி முடிவு ஆயுர்வேத மருத்துவ சபையிடம் உள்ளது.

ஏ.எம்.ஜி.என். தீப்தி சுமனசேன,
ஆயுர்வேத மருத்துவ சபையின் தலைவர்,
ஆயுர்வேத ஆணையாளர் நாயகம்.

மருத்துவ சபை அலுவலகம்,
02.06.2026.

**ஆயுர்வேத மருத்துவ சபை**

**சுகாதார மற்றும் ஊடக அமைச்சு**

(அலுவலக பயன்பாட்டிற்கு மட்டும்)

நிர்வாக உதவியாளர் தரம் III தொழில்நுட்பம் அல்லாத (MA 1-2) பதவிக்கான விண்ணப்பப்படிவம்

| | | |
|---|---|---|
| 1.0 | 1.1. முழுப் பெயர் : | |
| | 1.2. முதலெழுத்துக்களுடன் பெயர்: | |
| 2.0 | 2.1. நிரந்தர முகவரி: | |
| | 2.2. மாவட்டம்: | |
| 3.0 | 3.1. பால் (ஆண்/பெண்): | |
| | 3.2. தேசிய ஆளடையாள அட்டை இல.: | |
| 4.0 | 4.1. கைபேசி இல.: | |
| | 4.2. நிலையான தொலைபேசி இல.: | |
| 5.0 | 5.1. பிறந்த திகதி: | |
| | 5.2. விண்ணப்பங்கள் ஏற்கும் இறுதித் திகதியில் வயது: | |
| 6.0 | 6.1. திருமணமானவர் / திருமணமாகாதவர்: | |

7.0 கல்வித் தகைமைகள் (மொழி மூலம் உட்பட): மொழி மூலம் ................................

(க.பொ.த. (சாதாரண தரம்) தேர்வில் சிங்களம்/தமிழ், ஆங்கிலம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் சிறப்புச் சித்தி பெற்று, ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்)

| க.பொ.த. (சா.த.) ஆண்டு – .................................... சுட்டெண் – .................................... | | | |
|---|---|---|---|
| *பாடம்* | *தேர்ச்சி* | *பாடம்* | *தேர்ச்சி* |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

(க.பொ.த. (உயர்தர) பொதுப் பரீட்சை தவிர்த்து மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும்)

| க.பொ.த. (உ.த.) ஆண்டு .................................... சுட்டெண் .................................... | | | |
|---|---|---|---|
| *பாடம்* | *தேர்ச்சி* | *பாடம்* | *தேர்ச்சி* |
| | | | |
| | | | |
| | | | |

• மொழித் திறன்:

| *மொழி* | *வாசித்தல்* | *எழுதுதல்* | *பேசுதல்* |
|---|---|---|---|
| (அ) சிங்கள மொழி | | | |
| (ஆ) தமிழ் மொழி | | | |
| (இ) ஆங்கில மொழி | | | |
| (ஈ) பிற வெளிநாட்டு மொழிகள் | | | |

• திறன்கள்:

கணினி அறிவு (விவரங்களை குறிப்பிடவும்) (அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் குறைந்தது ஆறு (06) மாதங்கள் அலுவலக மென்பொருள் (Microsoft Office) கணினி பாடநெறி கற்றிருக்க வேண்டும்)
……………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………

• பிற தகுதிகள் :
……………………………………………………………………………………………………………………………………
……………………………………………………………………………………………………………………………………

11.0 விண்ணப்பதாரரின் உறுதியுரை :

இந்த விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் என் அறிவுக்கெட்டியவரை உண்மையானவை மற்றும் சரியானவை என உறுதியளிக்கிறேன். இதில் குறிப்பிட்ட ஏதேனும் தகவல் தவறானது அல்லது பிழையானது என்று தெரிவுக்கு முன்னர் அல்லது பின்னர் தெரியவந்தால், என்னுடைய பரீட்சார்த்தத் தன்மை / நியமனத்தை இரத்து செய்யும் உரிமை ஆயுர்வேத மருத்துவ சபை தெரிவு தலைவருக்கு உள்ளது என்பதை அறிவேன்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான சட்டங்கள் மற்றும் விதிமுறைகளுக்கு கட்டுப்பட்டிருக்கவும், சட்டவிதிகளின்படி நான் தகுதியற்றவனாக தெரியவந்தால் தெரிவுக்கு முன்னர் அல்லது பின்னர் என்னுடைய பரீட்சார்த்தத்தன்மையை / நியமனத்தை இரத்துசெய்யும் எந்த முடிவிற்கும் கட்டுப்படுவதற்கு ஒப்புக்கொள்கிறேன்.

………………………………………………………………
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி: ……………………

06-93

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கை - ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் மொரட்டுவை

## கல்வி, உயர்கல்வி மற்றும் தொழில்கல்வி அமைச்சு

## தொழிற் கல்வி பிரிவு

## தேசிய தொழில் பயிலுனர் திட்டத்தின் கீழ் முழு நேர பயிற்சி நெறிக்கான அனுமதி - 2026

இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம் கீழ்க்காணும் ஆகக் குறைந்த தகமைகளையுடைய ஆண்/ பெண்இருபாலாரிடமிருந்து2025ஆம்ஆண்டுஅனுமதிக்கான பயிலுனர் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. (அ) **வயது** :

2026.07.05 ஆம் திகதியன்று 16 வயதிற்கும் 22 வயதிற்கும் இடைப்பட்டிருத்தல் வேண்டும்

(ஆ) **கல்வி** :

க. பொ. த. சாதாரண தர பரீட்சையில் தமிழ் அல்லது சிங்களம் (போதனா மொழி) , கணிதம் உட்பட 06 பாடங்களில் ஓர் அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் .

அல்லது

க. பொ. த. (இலண்டன்) சாதாரண தர பரீட்சையில் ஆங்கிலம், கணிதம் உட்பட 06 பாடங்களில் ஓர் அமர்வில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்

**விசேட திறமை :**

மின்னியல் / இலத்திரனியல் / இயந்திரவியல் துறைகளில் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபட்டு தேசிய / மாகாண மட்டத்தில் இலங்கை புத்தாக்குனர் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட முதல் மூன்று இடங்களில் ஒன்றினை பெற்ற சான்றிதலுடன் (ஆ) கல்வி தகமையினை இரண்டுக்கு மேற்பாடாத அமர்வுகளில் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ) தேசிய தொழில் பயிலுனர் தொழிற்பயிற்சி அதிகார சபையில் 03 அல்லது அதற்கு மேற்பட்ட வருடங்களுக்கான பயிற்சியினை பெறுவோர் விண்ணப்பிப்பதற்கு தகுதியுடையோர் அல்லர்

02. **பயிற்சி போதனை மொழி மூலம்** :

எல்லா பாடநெறிகளும் சிங்களத்தில் நடாத்தப் படுவதோடு, மோட்டார் இயந்திரவியல் மாத்திரம் தமிழில் நடத்தப்படும். கோட்பாட்டு வகுப்புகள் ஆங்கிலத்தில் போதிக்கப்படும்.

03. **நுழைவுத் தேர்வு** :

மேல்குறிப்பிடப்பட்ட தகைமைகளையுடைய, கீழே 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சை கட்டணங்கள் செலுத்திய விண்ணப்பதாரி மட்டும் நுழைவுத்தேர்வுக்கு அழைக்கப்படுவர்.

(அ) **பரீட்சைக்கான மொழி**: தமிழ் / சிங்களம்

(ஆ) **பரீட்சை நிலையம்:** அனுமதிக்கான எழுத்து மூல பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, பதுளை, அனுராதபுரம் ஆகிய பரீட்சை நிலையங்களில் நடைபெறும் (போதிய அளவு பரீட்சார்த்திகள் இல்லாத நிலையங்களில் பரீட்சை இரத்து செய்யப்பட்டு அவர் விருப்பும் வேறு பரீட்சை நிலையத்தில் பரீட்சை எழுத அனுமதிக்கப்படுவர்.

**எழுத்து மூல பரீட்சை** :

கணிதம், அடிப்படை தொழிநுட்ப அறிவு, தொழி நுட்ப வரைபு, நுண்ணறிவு, பொது அறிவு, ஆங்கிலம் ஆகியவற்றை அடிப்படையாக கொண்ட 02 வினாப்பத்திரங்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

04. **பரீட்சைக் கட்டணம் :**

விண்ணபத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முறையின்படி 1000 ரூபா செலுத்தப்பட வேண்டும். இதை தவிர வேறு எந்த முறை கொடுப்பனவும் ஏற்று கொள்ளப் படமாட்டாது. அனுமதி பரீட்சைக்கு தோற்றாத காரணத் தினாலோ அல்லது வேறு எந்த காரணத்தினாலோ பரீட்சைக் கட்டணம் மீளளிக்கப்பட மாட்டாது என்பதை விஷேட கவனத்தில் கொள்க.

05. **ஆரம்ப தேர்வு முறை :**

எழுத்து மூல பரீட்சையில் ஆகக்கூடிய புள்ளிகளை பெறுபவர்கள் மத்தியிலிருந்து திறமை அடிப்படையில் தகமை உடையவர்கள் செயல்முறை பரீட்சை மற்றும் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர். பின் தங்கிய மாவட்டங்களின் வெட்டுப்புள்ளி குறைக்கப் பட்டுள்ளது. (இவ் வெட்டுப்புள்ளி இலங்கை பரீட்சைத் திணைக்களத்தின் நடைமுறைக்கேட்ப தீர்மானிக்கப் படும்.)

06. **இறுதி தேர்வு முறை** :

நேர்முகப் பரீட்சைக்கு முன்பாக செயல்முறை பரீட்சை யொன்றுக்கு உட்படுத்தப்படுவர். செயல்முறை பரீட்சை யின் 40% உம், நேர்முக பரீட்சையின் 60% உம், புள்ளிகளாக வழங்கப்படும். விளையாட்டு போன்ற சிறப்பு தகைமைகள் இருந்தால் அவைகள் கவனத்தில் கொள்ளப்படும்.

பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டோர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். இதில் சித்தி அடையாதோர் பயிட்சியில் இருந்து நீக்கப்படுவர்.

07. பயிற்சி நெறி :

| *இல.* | *பயிற்சி நெறி* | *பயிற்சி காலம் (ஆண்டுகள்)* |
|---|---|---|
| 01 | மோட்டார் இயந்திரவியல் தொழிநுட்பவியலாளர் Automobile Technician | 04 |
| 02 | மில்ரயிட் / வார்ப்பியலாளர் தொழிநுட்பவியலாளர் Millwright Technician | 04 |
| 03 | காற்று பதனமாக்கல்/ குளிரூட்டல் தொழிநுட்பவியலாளர் Refrigeration & Air Conditioning Technician | 03½ |
| 04 | வலு மின்னியல் தொழிநுட்பவியலாளர் (தொழில்துறை ) Power Electrical Technician (Industrial) | 03½ |
| 05 | கடைசல் இயந்திர தொழிநுட்பவியலாளர் Machinist | 03½ |
| 06 | எந்திர மின்னணுவியல் தொழிநுட்பவியலாளர் Industrial Mechatronic Technician | 03½ |
| 07 | டீசல் பொறிமுறையாளர் Diesel Technicain | 03 |
| 08 | வாகன மின்னியல் வல்லுநர் Automobile Electrician | 03 |
| 09 | உருக்கி இணைத்தல் Welder | 03 |
| 10 | வாகன உடல் திருத்துதலும் வர்ணம் தீட்டுதலும் Motor Vehicle Body Repairer & Painter | 03 |

நிறுவனத்தில் சேர்க்கப்பட்ட பிறகு, உள்வாங்கப்படும் பாடநெறியானது நுழைவுப் பரீட்சை மதிப்பெண் அடிப்படையிலும், அடிப்படை பயிற்சிக்காலத்தில் வரவின் அடிப்படையிலும் தங்களால் வழங்கப்படும் பாடநெறி விருப்ப வரிசைப்படி தீர்மானிக்கப்பட்டு வழங்கப்படும்.

08. **பிணை முறி கைச்சாத்திடல் :**

04, 3 ½ , 3 வருட பயிற்சிக்கு தெரிவு செய்யப்படுவோர் எமது நிறுவனம் மற்றும் தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையுடன், பயிற்சியினை திருப்திகரமாக பூர்த்தி செய்வேன் என உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட வேண்டும்.

09. **விண்ணப்பத்திட்கான அறிவுரைகள் :**

எல்லா விண்ணப்பதாரிகளும் நிகழ்நிலையில் (online system) விண்ணப்பிக்க வேண்டும். இணையதள நிகழ்நிலையில் (online system) விண்ணப்பம் நிரப்பும் போது முழுவதும் ஆங்கில மொழியில் நிரப்ப வேண்டும் . கீழே உள்ள முகவரி மூலம் இணையதள நிகழ்நிலையை (online system ) செயட்படுத்த முடியும்.

https://fta.germantec.lk

தொழில்நுட்ப விசாரணை : 0701 640 650 (வார நாட்கள், மு.ப. 8.00- பி.ப. 5.00 )

நிகழ்நிலையில் (online system) விண்ணப்பம் நிரப்ப முன்னர் இணையத்தளத்தில் உள்ள அறிவுரைகளை பின்பற்றவும்.

எல்லா விண்ணப்பதாரர்களுக்கும் நிகழ்நிலையில் விண்ணப்பம் நிரப்பிய பின்னர் அதன் பிரதியை அச்சு எடுக்கும் வசதி வழங்கப்பட்டுள்ளது . அவ்வாறு பெற்றுக்கொள்ளும் கடின நகல் (Hard copy.pdf) உடன் கீழே தரப்பட்டுள்ள சான்றிதழ்களை பிரதி எடுத்து இணைத்து கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பவும்.

1. பிறப்பு அத்தாட்சி பத்திரம்;
2. க.பொ.த. சாதாரண தர பரீட்சை சான்றுதல்;
3. இலக்கம் 1 இல் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு இணங்க இலங்கை புத்தாக்கங்கள் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்ட சான்றிதழ்கள்.

தபால் உறையின் இடப்பக்க மூலையில் "முழுநேர பயிற்சிநெறிக்கு பயிலுனர்களை சேர்த்தல் 2026" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

மேலே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை கவனத்தில் கொள்ளாமல் விண்ணப்பதாரிக்கு ஏற்படும் அசவுகரியங் களுக்கு நிறுவனம் எந்த பொறுப்பும் ஏற்றுக்கொள்ள மாட்டாது.

வழங்கப்படும் தரவுகள் பொய்யானது என தெரியவந்தால் பயிற்சியிலிருந்து நீக்கப்படுவர் என்றும் பின்னர் எந்த பரீட்சையிலும் தோற்ற முடியாமல் போகும்.

மேலதிக விபரங்களுக்கு www.germantec.lk என்ற இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

10. **விண்ணப்ப முடிவு திகதி** : 2026.07.05

09 இல் குறிப்பிட்டவாறு நிகழ்நிலை (online) மூலம் விண்ணப்பித்த பின்னர் அதில் பெறப்பட்ட கடின நகலின் பிரதியை (Hard copy.pdf) 2026.07.05 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு , கீழே உள்ள முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பவும்.

11. **பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் :**

தகைமையுள்ள பரீட்சாத்தியருக்கு எழுத்துமூலப் பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் 2026.09.08 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்படும். மேற்படி பத்திரம் கிடைக்கப்பெறாதோர் இத்தினத்தில் இருந்து 3 நாட்களுக்குள் கீழேயுள்ள தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்பு கொள்க.

முகவரி : பதிவாளர்,
இலங்கை ஜேர்மன் தொழில்நுட்ப பயிற்சி நிறுவகம்,
இல. 582, காலி வீதி, கல்கிசை, (அங்குலானை சந்திக்கு அருகில்)
தொலைபேசி : 0112605625 / 0112605535

06-48

---

## திருத்தம்

## இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் II மற்றும் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை

2026, மாச்சு மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 2482 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட “இலங்கை அரசாங்க நூலகர் சேவையின் தரம் II மற்றும் தரம் III உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை - 2025” எனும் பரீட்சை அறிவித்தல் பின்வருமாறு திருத்தப்படுகிறது.

02. அதற்கமைய, 5.0.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2026.06.19 வரை நீடிக்கப்பட்டுள்ளதுடன், இப்பரீட்சையை 2026, ஓகத்து மாதத்தில் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

03. குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய ஏற்பாடுகள் மாற்றமின்றி நடைமுறையில் இருக்கும் என்பதுடன், இதுவரை இப்பரீட்சைக்கு விண்ணப்பித்துள்ள அலுவலர்கள் இத்திருத்தம் காரணமாக மீண்டும் விண்ணப்பங்களை அனுப்ப வேண்டியதில்லை என அறிவிக்கப்படுகின்றது.

என். யு. நிஷான் மெண்டிஸ்,
இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்.

பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு,
சுதந்திர சதுக்கம்,
கொழும்பு 07.
2026, மே 29.

06-08

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப் பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

***அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.***

***முக்கிய கவனிப்பு.***– இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் ***அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.***

***அட்டவணை - 2026***

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யுன** | .. | வெள்ளி | 05.06.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 22.05.2026 |
| | | வெள்ளி | 12.06.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.05.2026 |
| | | வெள்ளி | 19.06.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.06.2026 |
| | | வெள்ளி | 26.06.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.06.2026 |
| **யுலை** | .. | வெள்ளி | 03.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.06.2026 |
| | | வெள்ளி | 10.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.06.2026 |
| | | வெள்ளி | 17.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 03.07.2026 |
| | | வெள்ளி | 24.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 10.07.2026 |
| | | வெள்ளி | 31.07.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 17.07.2026 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 07.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.07.2026 |
| | | வெள்ளி | 14.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 31.07.2026 |
| | | வெள்ளி | 21.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 07.08.2026 |
| | | வெள்ளி | 28.08.2026 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 14.08.2026 |

**பிரசன்ன ஜயரத்ன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2026 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 02 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.